சொப்பன வாசவதத்தம்

(வடமொழியில் பாஸன் செய்தது)

நாடகம்

இந்துமதப் பிரசங்கியார்

ஆர். பத்மநாப பிள்ளை

மொழிபெயர்த்தியற்றியது

பதிப்புரிமை ஆசிரியர்க்கே.

விலை ரூ.1-4-0

1944.
PRINTED AT THE
LONDON MISSION PRESS,
NAGERCOIL, TRAVANCORE, INDIA,
AND PUBLISHED BY THE AUTHOR.

1944.
நாகர்கோவில்
லண்டன் மிஷன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டு,
ஆசிரியரால் வெளியிடப்பட்டது.

மதிப்புரை.

FROM YOGI SHUDDHANANDA BHARATI, PONDICHERRY.

இந்துமதப் பிரசங்கியார், ஸ்ரீ. ரா. பதுமநாப பிள்ளையவர்களுக்கு மங்கலமாகுக.

தாங்கள் அனுப்பிய அரிய நன்னூல்களைப் பார்த்துப் பெருமகிழ்ச்சி யுற்றேன். நமது சமயத்திற்கும், தாய்மொழிக்கும் தாங்கள் செய்யும் பணி மிகச் சிறந்தது. தாங்கள் எழுதிய **ஆலவாய்மொழி** வரலாறு அரிய சரித்திர ஆராய்ச்சி யாகும். இதேமாதிரி நாஞ்சில் நாட்டு வரலாற்றைத் தாங்கள் எழுதலாம். தங்களுக்கு மலையாளத்திலும் தக்க புலமை யிருப்பதால், எழுத்தச்சன், மார்த்தாண்டவர்மன் முதலிய பெரியார் வரலாறுகளை வெளியிடலாம்.

தாங்கள் மொழிபெயர்த்த பாஸ கவியின் **சொப்பன வாசவதத்தம்,** எளிய இனிய தமிழில் அமைந்திருக்கிறது. மூலத்தின் கருத்து மொழிபெயர்ப்பை அலங்கரிக்கிறது. தாங்கள் கல்விப் பணியில் மிக்க அனுபவம் வாய்ந்திருப்பதால், மாணவருக்கேற்றபடி நூலைக் கருத்துடன் விளக்கமாக எழுதியிருக்கிறீர்கள். இந்த நாடகத்தைத் தமிழர் அவசியம் கற்க வேண்டும். ஆண் பெண் வாழ்வின் உயர்ந்த இலட்சியங்களை இந்த நாடகம் படிப்பவர் கருத்திற் பதியவைக்கும்.

சைவ சமயத்திற்காகத் தாங்கள் செய்யும் பணி மேன் மேலும் வளர்க. ஒரு சமுதாயத்திற்குத் தாய்மொழி உயிர், சமய அறிவு உயிர்க்குயிர் போலும். இரண்டையும் இரு கண்ணென மதித்துப் போற்றும் நாடு உலகிற் சிறந்து விளங்கும்.

தங்கள் இலக்கியப் பணிகள் சிரோங்குக,

அன்பு, அன்பு.

13-2-1944.

சுத்தானந்த பாரதி.

மதிப்புரை யளித்த பன்னூலாசிரியர் சுவாமியவர்கள் திருவடிகட்கு எனது மனமார்ந்த வணக்கம் உரித்தாகுக.

நூலாசிரியன்.

பொருளடக்கம்.

		பக்கம்
I.	பாத்திர ஆராய்ச்சி	1—4
II.	முன்னுரை	4—5
III.	கதைச் சுருக்கம்	6—8
IV.	கதை மாற்றம்	8—9
V.	செய்யுள் முதற் குறிப்பகராதி	9
VI.	முதல் அங்கம்	10—25
VII.	இரண்டாம் அங்கம்	25—28
VIII.	மூன்றும் அங்கம்....	29—31
IX.	நாலாம் அங்கம்	32—44
X.	ஐந்தாம் அங்கம்....	45—55
XI.	ஆறும் அங்கம்	56—72
XII.	அனுபந்தம்	73—77
XIII.	பரிசைக்குரிய வினக்கள்	78—79
XIV.	பிழையும் திருத்தமும்	79—80

முகவுரை.

திருவனந்தபுரம் டாக்டர் கணபதி சாஸ்திரியவர்கள் கொல்லம் 1092ல் பழைய கிரந்தசாலையைப் பரிசோதித்துப் பாஸ மகா கவியின் பதிமூன்று நாடகங்களையும் ஆராய்ந்தெடுத்து வெளியிட்டனர். அவைகள் காளிதாசனுக்கும் பலவாண்டுகளுக்குமுன் பிரசாரத்திலிருந்து பலவாண்டுகள் மறைந்துகிடந்தன. அவையில் சொப்பன வாசவதத்தமே சிறந்த நாடகமென்று சாஸ்திரியவர்கள் எழுதினர். பின்னர் கேரள காளிதாசன் மகா மகிமை ஸ்ரீ. வலியகோயில் தம்பிரான் "பண்டைக்காலக் கவிகளில் முதன்மையானவனும் காளிதாசன், பட்டபாணன், இராசசேகரன் முதலிய பற்பல கவி குஞ்சரங்களின் பாராட்டல்களுக்குரியவனுமான பாஸ மகா கவியின் நாடக நூற்களில் சொப்பனவாசவதத்தமே மிகச் சிறந்தது" எனக் கூறினர். பண்டித திலகம் மகா கவி வள்ளத்தோள் நாராயண மேனவன் பாஸ மகா கவியின் சிறந்த நூல்களுள் ஒன்றெனக் கூறி இதனை மலையாளத்தில் மொழிபெயர்த்தனர். மலையாள வடமொழிப் பேராசிரியர் எ. ஆர். இராச ராசவர்மா, எம். எ., எம். ஆர்., எ. எஸ். அவர்களும் மகோபாத்தியாயர் நாராயணன் போற்றியவர்களும் இதுவே சிறந்ததெனக் கூறி மலையாள மொழியில் ஆக்கினர்.

திருவாளர்கள் டாக்டர் ஸில்வயின் லெவி, பிரபஸர் வின்றேணிட்ஸ், இ. எயிச். ஜான்ஸ்டன், டாக்டர் லென்ஸி, பிரபஸர் ஜூள்ரெர் முதலிய மேலைநாட்டுப் பண்டிதர்கள் பாஸ நாடகங்களை நன்கு படித்து ஆராய்ச்சி செய்திருக்கின்றனர்.

பாரத நாட்டறிஞர்களான ஸ்ரீ. ஜாகிர்தார், ஸ்ரீ. பாலகிருஷ்ண பிள்ளை, பி. எ., பி. எல்., ஸ்ரீ. கிருஷ்ணப்பிஷாரடி, ஸ்ரீ. இராமப்பிஷாரடி முதலியோர்களும் இந்நூலைப்பற்றிய பற்பல ஆராய்ச்சிகளும் செய்திருக்கின்றனர். வடமொழிப் பேராசிரியர்களான உயர் திரு ஜி. கெ. இராமசுப்பிரமணிய சாஸ்திரியவர்களும், உயர் திரு தேவதார், எம். எ. அவர்களும் சொப்பன நாடகத்தைத் தக்கவாறு ஆராய்ந்து நூல் வெளியிட்டனர். தமிழ் நாட்டு மகா மகோபாத்தியாயர் பண்டித மணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் "கவிகுல திலகமாகிய காளிதாச மகா கவியின் காலத்திற்கு முன்னுள்ளவரும், நாடகக் கவிகளின் நிரலில் முன் வைத்து எண்ணப்பட்டவரும், பற்பல நாடகங்களின் ஆசிரியருமாகிய பாஸ மகா கவியினால் சாருதத்தம் எனப் பெயரிய நாடகம் ஒன்று இயற்றப்பட்டுளது.

அதனையே விரித்து விளக்கி மிருச்சகடிகம் என்னும் புத்துருவாக்கி சூத்திரகன் வெளிப்படுத்தியுள்ளாரென்பது ஆராய்ச்சியாளர் கண்ட உண்மையாகும். அச்சாருதத்தத்திற் கண்ட பல சுலோகங்கள் அப்படியே இதன்கண் எடுத்தாளப்பட்டுள்ளன . . . . . பெருங் கூற்றால் நாடகப் பேராசிரியராகிய பாஸ மகா கவியின் ஆற்றலையும் தன்னகத்தே கொண்டு மிளிர்தலைக் கண்டு இது தமிழிற் சிறந்த முறையில் மொழிபெயர்க்கப்படின் தமிழறிஞர்க்குப் பயன் விளைக்கும் என்னும் உறுதியுடையனாய் இப்பணியிற்றலைப்படலானேன்.” எனப் பாஸ மகா கவியின் பெருமையைத் தாமளித்த “மண்ணியல் சிறு. தேர்” எனும் அரும்பெரும் நாடக நூலில் முகவுரையின்கண் எழுதினர். அன்றியும், பாஸனது சாருதத்த நாடக சுலோகங்களையும் தமிழ்க் கவிகளில் தந்த முதன்மைத் தானமும் அவர்கட்கே உரியது.

ஒரு நூலை மொழிபெயர்த்தல் எளிதல்லவென்பது அறிஞர்கள் கண்ட வுண்மையன்றோ? “குதிரை கழுதையாயினும் ஆகும் என்றார்” ஓர் பெரியார்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

பண்டிதத் தலைவன் பாசன் செய்த
கண்டினும் இனிய கவினுறு நாடகம்
புவியோர் போற்றும் கவியர சளித்த
சுவைபல நிறைந்த சொப்ன வாசவ
தத்த மென்னும் தகைசால் நூலை
இத்தரை யதனில் எல்லா மொழியிலும்
ஆக்கிப் பாடம் அமைத்துப் படித்தனர்
நோக்கி யானும் நுவலரும் அவாவினால்
இயற்றினேன் எளியேன் இளைஞரே! தமிழில்
அரசன் மேன்மை அமைச்சரால் அடைவதும்
சரச லீலையில் சார்ந்து மயங்கி
கடமை தவறும் காதல் மன்னவன்
உடமை யழிதல் உறுதி யென்பதும்
உடுக்கை யிழந்தவற் குதவும் கைபோல்
இடுக்கண் நீக்கி யேந்துவர் அமைச்சர்,
அன்புடை மனைவி ஆருயிர் இழந்தால்
துன்பம் மிக்குத் துணிவர் காதலர்
வன்கண் வாழ்வினும் மரணம் மேலதாய்

பிரிவாற் ருமைப் பெருநோ யாதலும்
அரிவை வேண்டுவ தன்புடைக் காதலும்
தலைவன் மேன்மை தழைத்து வாழ
உலைவுறும் துயரம் ஒருங்கே யேற்றலும்
உத்தம மடவார்க் கொத்த பெற்றியும்
இத்தரை யதனில் இணையிலா முனிவர்க்
கேற்ற வெல்லாம் இசைவாய் நல்கலும்
வீரம் மானம் வேந்தர்க் காரமாம்
பணயம் ஏற்றதைப் பழுதில் காத்தலும்
துணைவ னோடு துயரம் கூறலும்
கீதம் வீணை கேடிலாக் கலைகளும்
மாதர் கற்றல் மாண்பினை விளத்தலும்
இருவர் மனைவியர் இசைவாய் வாழலும்
எத்தொழின் முதலினும் இறைவனை இறைஞ்சலும்
பகைவரை யழித்தும் பாரைக் காத்தல்
நிகரில் வேந்தன் நேர்மை என்பதும்
விருந்துப சரிக்கும் திருந்திய வழக்கமும்
மன்னும் நீதி உன்னுதற் கரிதே.

மாணவர்க்குப் பயன்படுமாறு பாத்திர ஆராய்ச்சி, கதைச் சுருக்கம், நாடக பாத்திரங்களின் பெயர் விளக்கம், முன்னுரை, அநுபந்தம், பரிக்ஷைக்குரிய வினாக்கள் இவைகளைச் சேர்க்கலுற்றேன்.

தமிழில் உதயணன் சரிதம் கொங்குவேளிர் செய்த பெருங் கதையிலும், உதயண குமார காவியத்திலும் கூறப்படுகின்றது. இந்நூலில் ஏற்றவிடங்களில் பெருங்கதை யெடுத்தாளப்பட்டிருக் கின்றது.

நாடகம், கூத்தொடு நிகழ்ந்த கதையாதலால் கண், காது, உள்ளம் இவைக்கு இன்பமளிக்கவேண்டும். நடிப்பிற்குத் தக்கவாறு விரைவில் அமைக்கின்றேன்.

நாடக நூற்களில் செய்யுட்கள் மிகுதலாகாவென்னும் வரை யறையுளது. இதிலவசியமான செய்யுட்கள் உள. பாசன் பல நயங்களோடும் செய்யுட்களை அமைத்திருக்கின்றனர். நாடக இலக் கண விசேடங்களும் மெய்ப்பாடுகளும் மகா கவியின் நூலில் பொதிந்து கிடக்கின்றன.

இந்நூலை அச்சிட நல்ல தாள் யுத்தத்திற்கு முன்னுள்ள விலைக்குத் தந்துதவியும், புரூப் திருத்தியும், விரைவில் அச்சிடத்தக்க ஏற்பாடு செய்தும் வேண்டிய உதவிபுரிந்த நாகர்கோயில் லண்டன் மிஷன் அச்சுக்கூடத்தாருக்கும், அசல் பெயர்த்தெழுதிய எனது நண்பர் ஆரைவாய்மொழி ஸ்ரீ. பி. ஆறுமுகம் பிள்ளையவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

ஆரைவாய்மொழி
15-1-1944.

ஆர். பதுமநாப பிள்ளை.

அங்கம்.

ஓர் நாடகத்திற்கு ஐந்து முதல் பத்தங்கம்வரையிலும் இருக்கலாம். இதற்கு ஆறங்கம் உண்டு.

I. பிரம்மசாரி அங்கம்.
II. பந்தாட்ட அங்கம். ("The ball-play act.")
III. பூத்தொடை அங்கம். ("The flower-cleaning act.")
IV. லேபாவிகை அங்கம்.
V. சொப்பன அங்கம்.
VI. சித்திரபலகாங்கம்.

நாடக பாத்திரங்கள்.

ஆண் நடிகர்கள்.

1. அரசன்—வத்ஸ மன்னன், உதயணன்.
2. யௌகந்தராயணன்—வத்ஸனது அமைச்சன்.
3. விதூடகன்—வசந்தகன்.
4. பிரம்மசாரி—இலவாணத்தில் கற்கும் மாணவன்
5. மெய்காப்பாளன்—
6. இரைப்பியன்—மகாசேனனது மெய்காப்பாளன்.
7. சம்பாஷகன் }—இரு ஏவலாளர்.
8. படன் }

பெண் நடியர்கள்.

9. வாசவதத்தை—உதயணனது முதல் மனைவி. ஆவந்திகை யென்பவளும் அவளே.
10. பத்மாவதி—மகத மன்னவன் தருசகனது சகோதரி.
11. தவமாது—
12. சேடி—பத்மாவதியின் ஏவற்பெண்.
13. மதுகரிகை }—பத்மாவதியின் தோழிகள்.
14. பத்மினிகை }
15. செவிலித்தாய்—பத்மாவதியின் வளர்ப்புத் தாய்.
16. வசுந்தரை—வாசவதத்தையின் வளர்ப்புத் தாய்.
17. விஜயை—வாயில் காப்பவள்.

பாத்திர ஆராய்ச்சி.

I. உதயணன்:— எப்பொழுதும் வாசவதத்தையிடம் முழு மனதையும் வைத்திருந்தான். அவளிறந்துவிட்டாளென்று அறிந்த பின்னும் பத்மாவதியை மணந்தபின்னரும் அவளைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்தான். அவன் குணங்களில் முதன்மையானது தத்தையிடம் கொண்ட அளவற்ற காதலாம். தருசகன் வாசவதத்தை உயிரோடிருக்கும்போது பத்மாவதியை மணம் செய்து கொடுக்க மறுத்தது இக்காதலின் பலத்தினலாகும். யௌகந்தராயணன் அரசியை மறைத்துவைக்கின்ற துணிகரமான யோசனையைக் கொண்டதற்கும் இவ்வன்பே காரணம் பத்மாவதியும் அவன் மணம் செய்த பெண்ணின்மேல் மிக்க காதல் கொண்டிருப்பதைக் கேட்டு அவளும் காதல் கொண்டாள். பத்மாவதியின் குணம், பார்வை, புத்திசாதுரியம் இவைகளில் ஆசையிருந்தாலும் அவன் முழுமனதும் அவளிடம் செல்லவில்லை. கவலைகளை மறக்க வரும் சந்தர்ப்பங்களில் அவன் அவைகளை நழுவ விடுவதில்லை. 5-ம் அங்கத்தில் அவன் மிக்கக் கவலையிலாழ்ந்தபோது ஆருணியைத் தாக்கவொரு படை தயாராயிருப்பதாயறிந்தான். உடன் துன்பமடக்கிப் போர்க்களம் சென்றான். அவனுக்கு மகாசேனன், மனைவி இவர் மேலுள்ள பெருமித அன்பைப்போல் தருசகனிடமும் உண்டு. கூர்மையான புத்தியும் கபடமற்ற தன்மையும் மகாசேனன் உதயணனுக்கென்று சில தூதர்களையனுப்பியபோது இக்குணங்கள் விளங்கின. யூகி தத்தையை மறைத்துவைத்த காரணங்களைக் கூறியபொழுது அரசன் அவனை மிகவும் வாழ்த்தினன். அவன் செய்த தொண்டுகளை மிகவும் போற்றினன். சூரியோதய காலத்திற் பிறந்ததால் இப்பெயர் வந்ததென்பர்.

II. வாசவதத்தை:— உதயணனது பட்டத்தேவி. "Vasavadatha is not the jealous if high-minded wife of Harsha's plays; she is the devoted and self-sacrificing lover, who is willing to postpone her own feelings and wishes to the good of her husband. The king and queen are the finest products of Bhasa's characterization of lovers."

பக்தியும் தன்னலமின்மையும் உள்ள காதலி. அவளது எண்ணங்களையும் ஆசையையும் தன் கணவன் நன்மைக்காக மாற்றிவைக்க எண்ணம்கொண்டாள். காதலர்களின் குணங்களைப்பற்றிய பாசனது கூற்று, அரசனையும் அரசியையும் பற்றியது, மிகவும் மேலானது. காதல் அவளது ஜீவ இரத்தத்திற்கு (உயிருக்கு) ஒப்பாகும். கணவன் வேறொரு பெண்ணில் காதல் கொண்டிருக்கும் போது அதற்கு யாதொரு இடையூறும் செய்யவில்லை. காதல் கணவ

னுக்காகவும், நாட்டிற்காகவும் செய்யவேண்டிய காரியங்களை மறைக்க விடவில்லை. இழந்த நாட்டை வெல்லுதற்கு ஏற்ற ஒரு வழி தருசக அரசனது உதவி கலியாணக் கூட்டுறவால்தான் முடியுமென்றறிந்தாள். உடன் அவள் சந்தோஷமாகத் தனது மேலான நிலைமை, இராஜபோகம் முதலியவற்றைத் தியாகம் செய்துவிட்டு பத்மாவதியை அவளது கணவனுக்கு மணம் செய்துவைக்க மிக்க துயரத்துடன் வேலை செய்தாள். எப்போதும் அரசனது எண்ணமே அவள் முன்னிற்கும். அரசனுக்குப் பத்மாவதியைக் கொடுக்க இசைந்த வார்த்தையைக் கேட்டபொழுது அவனது உடல் நலத்தை வினவினாள். அவளுக்குக் கணவன் தன்னிடம் நன்றாய்க் காதல் கொண்டிருப்பதாய்த் தெரியும். அரசன் துன்பத்தால் மனம் தளர்ந்து விடுவானென்னும் அச்சம்மிக்கிருந்தது. மணவிழாக்களெல்லாம் நன்றாக நடந்தேறியபின் நந்தவனம் (pleasure garden) சென்று பின் வருமாறு கூறுகிறாள். எனது காதற் கணவனைக் காணலாமென்று எண்ணியே யான் உயிருடனிருக்கிறேன். 4-ம் அங்கத்தில் அரசன் அவளைப்பற்றிக் கூறியபொழுது அவள் அதைக் கேட்டு மகிழ்ந்தாள். அன்றியும் மறைவாகத் தன்னை வைத்தமைக்குக் கடவுளுக்கு நன்றி செலுத்தினள். காதலுடன் நாணம் அச்சம் முதலியனவும் உள. பிரம்மசாரி அரசனது துன்பத்தைப்பற்றிக் கூறும்பொழுது அவள் துன்புற்று, "பெருமான் யௌகந்தராயணன் திருப்தியடைவாராக" என்று கூறினள். பத்மாவதியை அரசனுக்கு நிச்சயித்தபொழுது அவளது எண்ணம் தலைகீழாய் மறிந்துவிட்டது. தன் வேலையை மறந்து உரக்கக் கூறினாள். பத்மாவதியை நாதனார் விரும்பினாரா? அல்லது தருசகன் கொடுத்தானா? எனும் ஆசை பெண்களின் இயல்பைக் காட்டுகின்றது. எப்பொழுதும் மேன்மையாகவும் பொறாமையற்றவளாகவும் இருந்தாள். அவள் பத்மாவதியின் அழகையும் குணங்களையும் ஆதரித்தாள். பத்மாவதிக்குத் தலைக்குத்து வந்தபொழுது சொந்தக்காரியம்போல் பக்கத்தில் சென்றிருந்தாள். கவி நாடகம் முழுதும் தத்தையை மிகவும் புத்திகூர்மையுள்ள பெண்ணாக வருணித்திருக்கிறார். நெருக்கடியான சந்தர்ப்பங்களில் மிகவும் சாமர்த்தியமாக நடந்துகொண்டாள். அரசன் அழகுள்ளவனென்பதற்கு "உச்சயினி மக்கள் கூற்றென்றும்" பத்மாவதியைவிடக் கூடுதல் நேசிப்பதாய்க் கூறியதற்குரிய மறுமொழியும் சான்று தரும்.

III. பத்மாவதி:— அரசன் வசந்தகனிடம் பத்மாவதியின் மேன்மை, இனிமையான குணங்கள் முதலியவைகளால் நான் அவளை நேசிக்கிறேன் என்று கூறினான். உடன் வசந்தகன் பத்மாவதி இளமை, அழகு, தற்பெருமையின்மை, சாந்தம், இன்சொல், பிறரை உபசரித்தல் முதலிய நற்குணங்கள் வாய்த்தவளென்றான். தத்தை

யவளை சகோதரிபோல் நேசித்தது இவைகளால்தான். யௌகந்த ராயணன் அவளுக்கு புத்திகூர்மை உண்டென்றும், தன் மனதைத் தானறிந்தவளென்றும் கண்டதினால் அவனது சிறந்த யோசனையைத் தைரியமாக நடாத்தமுடியும் என்று எண்ணினான். அவள் கணவனிடம் தனது சுதந்திரத்தைக் காட்டவில்லை. அவள் அரசன் கண்ணீர் வடித்த காரணத்தையறிந்திருந்தாலும் விதூடகனும் அரசனும் கூறிய காரணத்தை நம்புவதுபோல் நடித்தாள். ஏனெனில் பிறர் மறைத்துவைக்கும் காரணங்களைக் கேட்டு மனதைப் புண்படுத்துவது அவளுக்கு விருப்பமில்லை. அவள் வாசவதத்தையைப் பெருமையாக நடத்தினதால் முடிவில் அவளிடம் சிநேகிதையாக நடாத்தியதற்கு மன்னிப்புக் கேட்டாள். தத்தையைப்போல கூர்ந்த அறிவும் பேசுந்திறமையும் உள.

அரசன் தன்னை மணந்த பின்பு அவன் முதன் மனைவியின் மேலுள்ள காதலை வளர்த்துக்கொண்டிருந்தும் அவள் அரசனிடம் யாதொன்றும் கூறவில்லை. இன்னும் சில காலத்தில் சிறந்த காதலைப் பெறலாம் என்று நம்பியிருந்தாள். 4-ம் அங்கத்தில் அரசன் யார் மேலதிக அன்பு என்று சொல்லத் தயங்கியதால் வாசவதத்தையின் மேல்தானென்று அறிந்தாள். இன்னொரு முக்கிய குணம் கபடமின்மை.

IV. யௌகந்தராயணன்:— முதலங்கத்திலும் கடையங்கத்திலும் காட்சியளித்தாலும் அவனது குணங்கள் நம் மனதில் எப்பொழும் பதிந்திருக்கின்றன. முதன் மந்திரிக்குரிய குணங்கள் யாவும் அவனிடம் நிறைந்திருந்தன. அவையாவன: பக்கத்திலுள்ள நாடுகளைப்பற்றிக் கவனித்தல், அரச தந்திரம், கூரிய அறிவு, வீரத்தன்மை, விடாமுயற்சி இவைகளாம். அவனது அறிவின் விசேடமே இந்த நாடகம் முழுவதையும் நடத்துகிறது. முன் யோசனை போற்றத்தக்கது. அரசியை மறைத்து வைத்ததால்தான் உதயணனும் தருசகனும் கலியாணக் கூட்டுறவுக்குச் சம்மதித்தார்கள். பிரம்மசாரியைப் பத்மாவதியின் முன்னால் இலவாண நகரத்தில் பற்றிய தீயைப்பற்றியும் அரசனது புலம்பலைப்பற்றியும் எடுத்துக்கூறச்செய்தது வாசவதத்தை இறந்ததாகப் பொய்ச் செய்தியைப் பரப்புவதற்கும், பத்மாவதிக்கு அரசனிடம் காதல் கொள்ள ஓர் தருணம் கிடைத்ததென்று காட்டுவதற்குமாகும். கணவனைவிட்டு அரசி பிரிந்திருக்கும்போது உண்டாகும் சந்தேகங்களை நீக்குவதற்கு அவளைப் பத்மாவதியோடு சேர்த்தான். அவன் மிகவும் திறமையாக வேலை செய்ததால் அரசிகள் ஒருவரையொருவர் நேசித்தனர். போர்த் திறமை பெரும் போருக்கு ஆயத்தம் செய்ததிலிருந்து அறிக. அரசியிறந்துவிட்டாளென்று பரந்துவிட்டதால் மறைவாய் வேலை செய்யவேண்டி வந்தது. இதனால் அவன் வெற்றி விசேட

மானது. அவன் தன்னலங்கருதாது நாட்டிற்கும் அரசனுக்கும் தொண்டு செய்தது மிகச் சிறந்த குணமாம். கடைசியங்கத்தில் அரசன் தான் செய்த காரியங்களை யேற்றுக்கொள்ளுகிருனே அல்லவோவென்று திகிலடைந்ததாய்ச் சென்றது அரச பக்தியைக் காட்டுகின்றது.

V. வசந்தகன்:— விதூடகன் மிகவும் கஷ்டமான வேலையும் பார்த்தான். வாசவதத்தை யிறந்ததால் அரசனது பிரிவாற்ருமைப் பிணியை நீக்கும் வேலை யூகியாலளிக்கப்பட்டது. தனது தலைவனிடம் மிகுந்த பக்தியுடையவன். புத்திகூர்மையால் முதல் மனைவியின் எண்ணங்களை மறக்கச் செய்தான். அரசன் முதலில் தத்தையைப் பற்றி எண்ணி வருந்தினன். இவன் அரசனது எண்ணங்களைப் பத்மாவதியின்மேல் திருப்ப எண்ணியது கைகூடாமற் போனதால் அவன் தன் கவனத்தை ஆகாயத்திற் பறந்துசென்ற ஒரு நாரைக்கூட்டத்தின் மீது இழுத்துவிட்டான். அப்போது அரசன் துன்பம் சிறிது நீங்கிற்று. ஆனல் திரும்பவும் வருந்துவானென்று பூக்களினழகைக் காட்டினன். மீண்டும் மன்னன் வருந்துவது கண்டு அவனது துயரத்தை வெளியிலாக்க முயற்சித்தான். அரசன் விரைவிற் கூறினபோது மனதிலாகாததுபோலிருந்துவிட்டான். அடுத்த அங்கத்தில் பத்மாவதியின் தலைநோயைப்பற்றிக் கேட்டபோது அரசன் திடுக்கிட்டான். விதூடகன் வேண்டுமென்றே ஓர் மாலையைப் பாம்பென மயங்கிக் கூறினன். இதைக் கேட்டு அரசன் சிரித்தான். அரசனிடம் கதை சொல்லும்போது நகரத்தின் பெயரும் அரசனின் பெயரையும் மாற்றியுரைத்தான். மன்னன் தத்தை வந்தாளென்றதற்கு இவன் கனவென்று சொல்லி பெண்கள் அந்தப்புரத்திற்கு அழைத்துச்சென்ருன். அரசனைச்சமாதானப்படுத்துவதில் தளராமல் வெற்றி பெற்ருன். இவனது விகடம் நுட்பமாயிருக்கும். வெறுக்கத்தக்கதல்ல. சமயோசிதமாய் யக்ஷியின் பெயரைக்கூறி வாசவதத்தையைக் குறிப்பிட்டான். தான் ஏற்பட்ட வேலையைப் பூர்த்தி செய்தான்.

உருமண்ணுவான், பிரம்மசாரி, தவமாது முதலியோர்களைப்பற்றிச் சுருக்கமாய் வந்ததால் ஈண்டு விளக்கவில்லை.

முன்னுரை.

பாஸன் வடமொழியில் எழுதிய 13 நாடகங்களில் இது மேலானது. இந்தியாவிலுள்ள பல மொழிகளிலும் ஐரோப்பிய பாஷைகளிலும் வெளிவந்திருக்கின்றது. காலஞ்சென்ற திருவனந்தபுரம் டாக்டர் கணபதி சாஸ்திரிகள் நாடகங்கள் பதிமூன்றையும் கண்டுபிடித்தவர். அதன்பிறகு உலகமெங்கும் பரவிற்று. ஜனங்களுக்கு மகிழ்ச்சியை யூட்டிற்று. இவை பதின்மூன்றிலும் பாஸன் பெயர் வா

வில்லை. எல்லா நாடகங்களிலும் நாந்தியின் பின் சூத்திரதாரன் வருவான். இதில் "நாந்தியந்தேதத: ப்ரவிச்யதி சூத்திரதார:" என்று சூத்திரதாரன் கதையை ஆரம்பிக்கிறான்.

முதனூல் பைசாச பாஷையிலுள்ள பிருகற்கதையாகும். அது கிடையாது. குணாட்டியர் இயற்றினர். தமிழில் பெருங்கதையில் உதயணசரிதம் உளது. கதாஸரித்ஸாகரம் பிருகற்கதையை ஒட்டி எழுதப்பெற்றது. பாஸன் நாடகமாக அக்கதையைக் கொண்டு வந்தான். அது சிறந்ததே.

வடமொழியில் பாஸனைப்பற்றியொன்றும் தெரியாதென்பர். ஆயினும், தண்டி, பாணன், ஹர்ஷன், காளிதாஸன் முதலியோர் இவனைப் பெருமையாகக் கூறினர். டாக்டர் கணபதி சாஸ்திரிகள் கண்டு பிடித்தபின் பண்டிதர்களுக்குள்ளே கருத்து வேற்றுமையுடன் ஆராய்ச்சியிலிருக்கின்றது. முடிவுறவில்லை. பாஸ நாடகங்களைத் தீயிலிட்டதில் வாசவதத்தம் மட்டும் எரியவில்லையென்பர்.

பாஸன் காலம்:— பல வடமொழிப் பண்டிதர்களைப்போல் இவன் எப்பொழுது வாழ்ந்தானென்று தெரியாது. யாதொரு குறிப்பும் இல்லை. ஆராய்ச்சியில் கி.மு. 4-ம் நூற்றாண்டு முதல் கி.பி. 10-ம் நூற்றாண்டு வரையிலும் மாறுவதால் உறுதிப்படுத்த வியலாது. என்றாலும் பாஸன் பழையகால கவியென்றும் காளிதாசனைவிட முந்திய வனென்றும் அறிக. ஸ்ரீ. கணபதி சாஸ்திரிகளும் சிலரும் கி.பி. 370ல் என்பர். ஐரோப்பிய பண்டிதர்கள் பிந்திய காலமென்கின்றனர். பாணினிக்கு முன் என்பர். கௌடிலிய்யர் அர்த்த சாஸ்திரம் கையாண்டதால் முந்திய காலமுமாகும்.

பாஸன் இந்தியாவிலுள்ள பெரிய கவிகளில் ஒருவனாய் மதிக்கப் படுகிறான். பல நூற்களால் அவன் பெருமை தெரிகிறது. அவன் ஆலோசனை நாடகங்களில் மிளிர்கின்றது. இராமகிருஷ்ண கவியவர்கள் கி.பி. 100 முதல் 150 வரை யென்பர்.

நூலின் பெயர்:— ஐந்தாம் அங்கத்தில் உதயணன் சொப்பனத்திலிருந்து எழுந்து வாசவதத்தை போவதைக் கண்ணால் கண்டான். இது ஒரு கதைதானென்று நம்பச் செய்துவிட்டார்கள். சொப்பன வாசவதத்தம் எனும் பெயர் இலக்கணப்படிச் சரியன்று. சொப்பன நாடகம் என்பதே சரியென்பர். கனவு பிரகத் கதையில் இல்லை. இது பாஸனுடைய சொந்த அமைப்பு.

பிரகற்கதையைப் பெருங்கதையாகத் தந்த கொங்குவேளிர்க்கு நன்றி செலுத்தவேண்டும். துர்விநீதன் பிருகத்கதை முற்றும் வடமொழியில் மொழி பெயர்த்தான்.

கதைச் சுருக்கம்.

யமுனையாற்றின் கரையில் கௌசாம்பி என்ற தலைநகரத்தைச் சுற்றி வத்தவ நாடுளது. (அலகபாதின்மருங்கிலென்பர்). அபிமன்னுவின் குலத்தைச் சார்ந்த உதயணன் என்னும் அரசன் அந்நாட்டையாண்டுவந்தான். அம்மன்னன் அழகு மிக்கவன். இசை முதலிய இன்பக் கலைகளில் கைதேர்ந்தவன். ஆகையால் வீரம் சிறந்த தலைவர்களில் ஒருவனாய் விளங்கினான். அவனுக்கு வாசுகி யளித்த கோடபதியென்றொரு யாழிருந்தது. இவ்வீணையின் இனியவோசை காட்டிலுள்ள மிருகங்களை ஆகர்ஷிக்க உதவிற்று. வேட்டை, பெண் முதலிய எழுவகைத் துன்பங்களும் இவனையடைந்தன. அமைச்சன் யௌகந்தராயணனும் படைத்தலைவன் உருமண்ணுவாலுமே நாட்டையாண்டு வந்தனர்.

அந்நாளில் உச்சைனியை மகாசேனன் எனும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு அங்காரவதியில் கோபாலகன், பாலகன் எனும் இரு புதல்வர்களும், இந்திரன் அனுக்கிரகித்தவள் எனும் பெயர் கொண்ட வாசவதத்தை எனும் ஓர் புதல்வியும் உளர்.

இம்மங்கைக்கு ஏற்ற கணவன் உதயணன்தான் என்று மகாசேனன் தெரிந்துகொண்டான். ஆனால் உதயணன் பகைவனாயிருந்ததால் அழைத்து மகளையளிக்க மடித்தனன். காரியம் தேடமுயன்றனன். தனது அருமை மகள் வாசவதத்தைக்கு யாழ் கற்றுக்கொடுக்க உச்சைனிக்கு வருதல் நலமென ஓர் தூதனையனுப்பினான். வீரனும், தன் மானமுடையோனுமான உதயணனுக்கு இத்தூது அவமானமென்று தோன்றிற்று. உதயணன் மகாசேனன் மகளைத் தன்னிடமனுப்ப வேறு தூதனையனுப்பினான். அக்காலத்தில் பிரபு சக்தியால் அரசமண்டலத்தில் மேம்பட்டவனான மகாசேனனுக்கு இது பொறுக்கமுடியவில்லை. உதயணனை எவ்விதத்திலும் உச்சயினிக்கு வரவழைக்க வேண்டுமென்று அவன் ஓர் இயந்திர யானையை உண்டு பண்ணினான். சூழ்ச்சியால் அவனை வசப்படுத்திச் சிறையில் வைத்தனன். யானை வேட்டையில் மிக்க ஆசையுள்ள உதயணனைக் கௌரவப்படுத்தி மகளுக்கு வீணை கற்பிக்கும் ஆசிரியனாக்கிவிட்டான். வத்தவ மன்னன் ஏற்கெனவே வாசவதத்தைபால் காதல்கொண்டவனானதால் சிறை வாழ்வைப் பொருட்படுத்தாது இன்புற்றுக் காலம்கழித்தனன்.

மகாசேனன் வத்தவ மன்னனை வஞ்சித்து வசப்படுத்திய வரலாறு கௌசாம்பியில் அமைச்சர்கள் அறிந்து மக்களை சமாதானப்படுத்திவிட்டு அரசனை மீட்க முயலத்தொடங்கினர். மகா தந்திரசாலியான யௌகந்தராயணன் (யூகி) அரசனது வசந்தகன் எனும் விதூடகனையும் அழைத்துக்கொண்டு பைத்தியக்காரன் வேடம்புனைந்து உச்சைனியில் வந்தனன். இன்பமாய்ப் பாடவும் ஆடவும்

செய்து தெருக்களில் ஆர்ப்பாட்டம் உண்டுபண்ணினன். அதனால் கன்னியர் அந்தப்புரத்தில் செல்லல் எளிதாயிற்று. அங்கு அரசனை இரகசியமாய்க் கண்டு வேண்டுவன உபதேசித்தான். பெண் வேடத்திற் கொண்டுவந்த வசந்தகனை வாசவதத்தையின் கலைமகள் பூசகனுக்கி விட்டுத் திரும்பினன். வசந்தகன் கதை சொல்ல வல்லவன். பல கன்னியரும் பெற்றோர்களை வெறுத்துத் தன் காதலருடன் ஓடிப்போன கதைகள் கூறி வாசவதத்தையை தன் சுற்றத்தாரின் மீதுள்ள அன்பு குறையச் செய்தனன். இவ்வாறு வசீகரித்த வாசவதத்தையை அழைத்துக்கொண்டு உதயணன் யௌகந்தராயணன் கூறியபடி பத்திரவதியெனும் பெண்யானையின் மீதேறி இரவில் ஒளித்தேகினர். வழியில் உதவிக்கு உருமண்ணுவானும், புளிந்தகன் எனும் வேடமன்னனையும் யௌகந்தராயணன் ஏற்பாடு செய்திருந்தான். அதனால் சிறை மீண்ட உதயணனுக்கு எளிதில் இன்பமாய் கௌசாம்பியில் செல்லமுடிந்தது.

இது மகாசேனன் அறிந்தபோது சிறிதும் கோபங்கொள்ளாமல் புத்திரனாகிய கோபாலகனை வத்தவ நாட்டிற்கனுப்பி விதிப்படி திருமணம் நடாத்தினன்.

இயல்பிலேயே பெண் காமுகனாகிய உதயணனுக்கு வாசவதத்தையும், கோடவதியும், வேட்டையுமல்லாது வேறொன்றும் சிறிது காலத்திற்கு நினைவில் இல்லை. இக்காமுகனுக்கு வாசவதத்தையைத் தவிர விரசிகை, பந்துமதி, மஞ்சுளிகை என்னும் போகமாதர்களான மனைவிகளும் உளர். இதனையறிந்த அமைச்சர்கள் பரீக்ஷித்தின் குலத்திற் பிறந்த நமது மன்னபிரான் சக்கிரவர்த்தியாயிருக்கவேண்டியவர். ஆற்றல் மிக்க மகாசேனன் இவர்க்கிப்பொழுது பந்துவாகிவிட்டார். அடுத்த மகத மன்னவனையும் பந்துவாக்கிவிட்டால் சக்தியில்லா ஏனைய அரசர்களையெல்லாம் வென்றுவிடலாம். மகத வேந்தனுக்கு பத்மாவதியென்னும் ஒரு சகோதரியுண்டு. அக்கன்னிகையை உதயணனுக்குக் கொடுக்க மடிப்பது வாசவதத்தையை எண்ணித்தான். ஆகையால் சிறிது காலம் வாசவதத்தையை உதயணனது பக்கத்திலிருந்து வேறுபடுத்தி வைத்தால் எல்லாம் இனிது முடியும். இந்த ஆலோசனையின் பலனாக அமைச்சர்கள் அரசனிடம் வேட்டையின் வசதிகளைக் கூறி இலவாணம் எனும் சிற்றூருக்குப் பிரயாணமாக்கினர். அங்குவைத்து அரசன் வேட்டைக்குச்சென்றபோது கிராமத்தில் தீ வைத்து தீயில் வாசவதத்தையும் வசந்தகனும் எரிந்துபோயினர் என்னும் பொய் வதந்தியைப் பரப்பினர். யௌகந்தராயணன் வாசவதத்தையை ஆவந்திகையென்னும் பார்ப்பனி வேடத்திலும், வசந்தகனை கண்பார்வை குறைந்த பிரமசாரி வேடத்திலும் பத்மாவதியினிடம் பணயமாய்க் கொடுத்தனர். வாசவதத்தையை சம்மதிக்கச்

செய்யவும் மற்றும் கோபாலகனையும் மந்திரிகள் இரகசிய யோசனையில் சேர்ந்திருந்தனர். உதயணன் வேட்டை முடிந்து வந்தபோது பெரிதும் வருந்தினன். கோபாலகன் ஆற்றினான். வாசவதத்தையில் தனக்கு காந்தர்வாம்சமான புதல்வன் தோன்றுவான் என்று நாரதமுனி அருளிச்செய்ததையுன்னி சாந்தியடைந்தனன்.

வாசவதத்தையின் துன்மரண வார்த்தை கேட்டு மகத மன்னன் சின்னாளைக்குள் உதயணனை ஆளனுப்பி வரவழைத்து பத்மாவதியை மணம் செய்துகொடுத்தனன். மணநாளில் திரும்ப கௌசாம்பிக்குச் செல்ல ஆயத்தம் செய்திருந்ததினால் மகத வேந்தனுக்கு வாசவதத்தையின் உண்மை தெரியாமற் போயிற்று. உதயணன் வாசவதத்தையின் மறைப்பின் நோக்கம் தெரிந்தவுடன் மகிழ்ந்தான். பத்தினிகளிருவருடன் உதயணன் இன்புற்று, திக்குவிஜயம் செய்து சக்கிரவர்த்தியாய் விளங்கினான்.

கதை மாற்றம்.

முற்கூறிய கதையை பாஸன் இரு நாடகங்களில் விளக்கினன். வாசவதத்தையைக் கைக்கொண்டது பிரதிஜ்ஞாயௌகந்தராயணத்திலும் பத்மாவதி திருமணம் சொப்பன வாசவதத்தத்திலும் கூறியுள்ளான். நாடகக்கதை பொருளில் மாற்றமில்லை. பத்மாவதியின் தவ வனயாத்திரை, ஆருணி நாடபகரித்தல், மகதனுதவியால் பகை வெல்லல், மகாசேனன் அங்காரவதி இவர்கள் தூது இவை கவி அலங்காரத்திற்காகக் கூடுதல் புனைந்தான். வசந்தகனால் வேறு வேலை அவசியப்பட்டதால் தீப்பிடித்தலில் வசந்தகன் ஸ்தானம் யௌகந்தராயணனுக்களித்தனன். உதயணனுக்கும் பத்மாவதிக்கும் மணம் நடைபெறுமென்று எதிர்கால பலன் கூற நாரதனை விட்டு புஷ்பகபத்திராதிகளான சித்தர்களையாக்கினது புராணப் போக்கு மாற்றத்தானென்று நினைக்க இடமுண்டு. அமானுஷத்தன்மையொன்றும் இந்நூலிலில்லை. ஆதலால் நாரதனை இக்கதையில் வரவழைக்கவில்லைபோலும். முதனூலைப்போல் கோபாலகனையும் இரகசிய யோசனையில் சேர்த்திருந்தால் யௌகாந்தராயணனது தந்திரம் வலி குன்றிப்போம். 5-ம் அங்கத்தில் விதூடகனைக்கொண்டு கதை சொல்வித்தல் பிள்ளைத்தனமாய்த் தோன்றுமாயினும் வசந்தகன் கதை சொல்ல வல்லானென்னும் முதனூலையொட்டிய கூற்று தானுடன்படுதல், எனும் யுக்தி பற்றியாம். அற்பமான விரசிகையின் வரலாறு முதலிய சிறு பொருள்களும் நாடகத்தில் விடாமற் சேர்த்தது அழகாய் இருக்கின்றது.

கதாஸரித் ஸாகரத்தில் மகத மன்னவன் பெயர் பிரத்யோதன். பத்மாவதியவன் மகள். சொப்பனவாசவதத்தத்தில் மன்னன் பெயர் தருசகன்; பத்மாவதியவன் சகோதரி. வசந்தகன் மாறுகண்ணுள்ள

பார்ப்பன வேடம்பூண்டு வாசவதத்தையுடன் சென்றான். வசந்தகன் பாச நாடகத்தில் அரசன் கூடவிருக்கிறான். சோமதேவன் நூலையும் பாஸநாடகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பாஸ நாடகம்தான் அதிக உண்மையும் மூலகதைக்கு ஒத்ததுமாகும். மூலகதையினின்றும் பாஸன் சிறுசிறு மாற்றம்தான் செய்தனன். டாக்டர் சாமிநாதையர் பெருங்கதைக்குச் சொப்பன வாசவதத்தம் வேறுபாடுள்ளதென்றார். உதிதோதய காவியம் சோமதேவன் எழுதினான்.

செய்யுள் முதற் குறிப்பகராதி.

	அங்கம்.	எண்.		அங்கம்.	எண்.
அச்சம்	I	12	சுகபோகம்	I	9
அச்சீமோ	VI	4	தனத்தை	I	10
அந்தணன்	VI	14	துன்பம்	IV	6
அம்மை	VI	—	தோரண	V	3
அரையில்	VI	2	நண்பொடு	I	7
அனந்தம்	VI	12	நாட்டை	VI	5
ஆத்திரம்	V	7	நல்லார்	IV	8
ஆவல்	I	—	நல்லொளி	VI	13
ஆற்றல்	VI	7	நற்குண	IV	9
இடறுறு	V	11	நிலமாளும்	I	14
இத்தகை	IV	5	நிறமதில்	I	13
இளவேனிற்	IV	7	நோராய்	IV	2
இன்புறும்	VI	1	படிக்கும்	V	6
உட்பகை	V	12	படுக்கை	V	8
உடம்பி	IV	4	பாத	VI	16
உடுப்பார்	I	3	பலநாளும்	VI	3
உதய	I	1	பழிகள்	I	5
உலகில்	VI	6	பறவை	I	16
எட்டிர	VI	9	பித்தன்	VI	18
எந்தன்	VI	15	பிரிக்கின்ற	V	5
எந்தன்	I	15	பூவும்	I	6
என்னை	VI	8	மகத	I	2
ஐயம்பன்	IV	—	மதுவுண்டு	IV	3
ஒல்லை	V	13	மன்னவனார்	I	11
கட்டழகும்	V	2	மன்னவன்	VI	11
கண்டது	VI	17	முன்னாளில்	I	4
கண்டேன்	IV	1	மெச்சும்	V	1
கலசம்	I	8	யார்தான்	VI	10
கனவதனின்	V	10	வத்தவ	VI	—

சொப்பன வாசவதத்தம்.

(பாலஸ நாடகம்.)

முதல் அங்கம்.

(நாந்தியினிறுதியில் சூத்திரதாரன் வருகிறான்.)

சூத்திரதாரன்:—

1. உதய நவேந்து ஒத்த ஒளியும்
அபல மானது வாசவதத்தம்
செய்த பலனது செவ்விய கரங்கள்
பதுமா வதார பந்தர பூர்ணமாம்
வசந்த கால மகிழ்ச்சி போன்று
துணைக்கவே நும்மை தொடர்ச்சி யாகவே.

யான் ஒரு விஷயம் பெரியோர்களின் முன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சீ! என்ன? யான் விண்ணப்பிக்க எண்ணும்போது யாதோ ஓர் ஒலி கேட்கின்றது. சரி பார்ப்போம். (திரைக்குள்) விலகுங்கள், விலகுங்கள்: பெரியீர்! விலகுங்கள்.

உதித்து வருகிற புதிய சந்திரனைப்போன்ற பிரகாசமும் மதுவினால் பலம் குறைந்ததும் இலக்குமியினால் திரும்பவும் பலமடைந்ததும் வசந்த கால இன்பம்போன்றதுமான பலபத்திரனது அழகிய கைகள் உங்களைக்காப்பாற்றுக. உதயனன், வாசவதத்தை, பத்மாவதி, வசந்தகன் என்னும்முக்கியநாடகபாத்திரங்களைச்சொல்லழகினால் சுட்டியிருக்கிறார்.

நவேந்து = புதிய சந்திரன். ஆசவம் = கள். பலன் = பலதேவன். பந்தூரம் = அழகு. அபலமானது + ஆசவதத்தம் = அபலமானது வாசவதத்தம். வாசவதத்தையின் பிரிவாலிழந்த பலம் உதயனன் பத்மாவதியின் மணத்தால் பெற்றான் என்பதும் சிறந்த பொருளாய் மிளிர்கின்றது.

1. நாந்தியென்பது அரங்க வழிபாடாம். (வாழ்த்து) அரங்கத்திற்கு அதிதெய்வமாக விளங்கும் நந்தி தேவரைப்பற்றி நிகழ்த்தலின் நாந்தியெனப்பட்டது, பலராமன் மதுகொடுக்கும் வழக்கமும் விசேடமான வெண்மைநிறமும் பின்பற்றிய உபகதைகள் ஏனைய கவிகளும் கூறுவர்.

சூத்திரதாரன்:— சரி தெரிந்துகொண்டேன்.

2. மகத நாட்டுடை மன்னவன்
மகளின் அன்புறு ஏவலர்
அகற்றி விட்டனர் அச்சமில்
அனைவர் ஆச்ரம மக்களை.

(போயினர்.)

அங்காரம்பம்.

(*பின்னர் வழி விலக்கிக்கொண்டு இரு வீரர் வருகின்றனர்.)

வீரர்கள்:— ஒதுங்கி நில்லுங்கள், ஒதுங்கி நில்லுங்கள் பெரியீர்! ஒதுங்கி நில்லுங்கள்.

(துறவி வேடத்தில் யௌகந்தராயணனும், அவந்தி நாட்டுப் பெண் வேடத்தில் வாசவதத்தையும் வருகின்றனர்.)

யௌகந்தராயணன்:— (செவிசாய்த்து) ஹா! இங்கும் வழி விலக்குகிறார்களா? என்னவென்றால்,

3. உடுப்பார்கள் மரவுரியை உண்பார்கள்
கனிகளையே உறுதி யாக
உடசத்தில் வாழ்வார்கள் உவகையால்,
போற்றுகின்ற உலகச் சான்றோர்;

---

*முன்னரங்கத்தின் ஒரு பகுதி நாந்தி. நாளடைவில் அதனைச் சுருக்கி நாந்தி மட்டும் வழக்கத்திலிருக்கின்றது. வாழ்த்து முன்னரங்கத் தலைவன் கூறுவான். பின்னர் சூத்திரதாரன் வருவான். நாடகத்தைப் பற்றிப் பிரஸ்தாவனை செய்வான். வாசவதத்தத்திற்குப் பின்னுள்ள நாடகங்களில் நாந்தியில்லை. மங்கல வர்ழ்த்திலிருந்து முன்னரங்கம் ஆரம்பமாகிறது. இந்நாடகத்தில் நாந்தி கூறப்படவில்லை. முதலில் கூறப்படும் மங்கல வாழ்த்திலிருந்து பிரஸ்தாபனையாரம்பமாகிறது. பிரஸ்தாபனையை ஆமுகம் எனவும் கூறுவர். நடியாதல், விதூடகனாதல், நடனாதல் சூத்திரதாரனோடு உரையாடுதல் இதன் இலக்கணமென்ப. இங்கே பிரஸ்தாபனையை ஸ்தாபனையென்றனர்.

2. மகதநாட்டு மன்னன் மகள்—பத்மாவதி.

3. உடசம்—பன்னசாலை. சிரமற்ற = ஸ்ரமற்ற. சிரமத்திற்கு ஏற்ற விலக்கிற்கச்செய்தல் ஆசிரமத்தில் கூடாது. அடவி—காடு.

திடுக்கிடவே பணிதலின்றி திரமற்ற
செல்வத்தா ளிருமாப் பெய்தி
அடவிதனை யோரூராய் அமைதியில்லா
தாக்கினதார் ஆணை அந்தோ !

வாசவதத்தை:— பெருமானே ! யார் நீங்கிநிற்கக் கூறுகின்றனர்?

யௌகந்தராயணன்:— தேவீ ! தன்னை அறத்தினின்றும் மாற்றுகின்றவன்.

வாசவதத்தை:— பெரியீர் ! அஃதல்ல யான் எதிர்நோக்கியது. யானும் வழிவிலகி நிற்கவேண்டியதாயிற்றே. என்றுதான் வினவினேன்.

யௌகந்தராயணன்:— பெருமாட்டி ! இன்னாரென்று அறியப் படவில்லையானால் தேவர்களும் இவ்வாறு ஆதரிக்காமலாவார்கள்.

வாசவதத்தை:— பெரியீர் ! இவ்வவமானத்தைவிட வழிநடந்த களைப்புப் பெரிதல்ல.

யௌகந்தராயணன்:— இத்தகைய பெரும் பதவிகளெல்லாம் அனுபவித்து இகழ்ந்தவைகளன்றோ? ஆதலால், இதில் கவலை வேண்டாம். ஏனெனின்,

4. முன்னாளி விதுபோன்ற முதன்மையாம்
யாத்திரைகள் முடித்தீ ரன்றோ?
பொன்னாரும் காதலனார் போந்திடுங்கால்
வெற்றியுடன் போவீர் மீண்டும்,
எந்நாளும் காலகதி இயங்குகின்ற
தேருருளை க்கியற்கால் போன்று
பின்னாகிப் போனவைகள் முன்னாகி
அதிட்டமெலாம் பெயரு மன்றே.

---

4. அதிட்டம்—நல்லனுபோகம். தேருருளைக்கியற்கால்—தேரின் உருளைக்கால் சுழன்றுகொண்டே வரும். ஊழனுபவத்திற்குவமானம்.

படைவீரர்:— மாறிநில்லுங்கள், பெரியீர்! மாறிநில்லுங்கள்.

(பின் *கஞ்சுகி வருகிறான்.)

கஞ்சுகி:— †சம்பாஷகா! கூடாது, கூடாது. இங்கு ஆட்களை விரட்டாதே. யோசித்துப் பார்.

5. பழிகள் யாதும் மன்னவர்க்குப்
பாங்கில் நீயும் செய்யற்க
வழியும் கோபம் பயனன்று
வணங்கும் ஆச்ரம வாசிகளில்
குழப்ப மிக்க நகரத்தின்
குறையில் வீழ அஞ்சினதால்
செழித்த மனங்கொள் பெரியோர்கள்
தீய காட்டில் வதிகின்றார்.

வீரர்கள்:— தலைவ! அவ்வாறே.

(போயினர்.)

யௌகந்தராயணன்:— நன்று. இவனைப் பார்த்தால் மரியாதை மிக்கவனாய்க் காணப்படுகிறான். அன்புடையீர்! நாம் மருங்கிற் போகலாம்.

வாசவதத்தை:— பெரும! அவ்வண்ணமே.

யௌகந்தராயணன்:— (பக்கத்திற் சென்று) ஐயா எதற்காக ஆள் விலக்குகிறீர்கள்?

மெய்காப்பாளன்:— ஓ முனிவரே!

யௌகந்தராயணன்:— (தன்னுள்) முனிவரே என்றழைப்பது ஓர்வகைப் பெருமைதான். என்றாலும், பழக்கமில்லாததால் அதென்மனதில் படவில்லை.

---

*கஞ்சுகி—மெய்காப்பாளன்.
†சம்பாஷகன்:— ஓர் படைவீரன்.
5. வதிகின்றார்—தங்குகின்றார்.

மெய்காப்பாளன்:— கேட்பீராக! குரவர்கள் *தருசகன் என்றழைக்கும் எங்கள் மன்னர்பிரானது சகோதரி பத்மாவதி என்பது இவள்தான். அவ்விளவரசி ஈண்டு தபோவனத்தில் எழுந்தருளியிருக்கும் மன்னர்பிரானது †தாயைக் கண்டு அனுமதிபெற்ற பின்னர் அரண்மனைக்கேகுவள். இன்றைக்கு அவர்கள் இங்கு தங்குகின்றனர். ஆதலால் தாங்கள்,

ஆசிரிய விருத்தம்.

6. பூவும் சமித்தும் குசைகள்
புனலும் வனத்தின் கணின்றும்
மேவும் . மனம்போல் கொணர்வீர்
மேலாம் தவப்பொரு ளெல்லாம்.
கோவின் மகளோ அறத்தின்
கோயிலே போன்றனள், செய்யாள்;
தாவத தருமத்தின் பீடை
தனக்கது குலதன்ம மாகும்.

யௌகந்தராயணன்:— (தனக்குள்) அந்த மகதமன்னவன் புதல்வி இவள்தான். புஷ்பக பத்திராதியரான சித்தர்கள் எம் மன்னர் பெருமானுக்குத் தலைவியாய் இவரே வருவரென்று கூறினர்.

7 கோச்சகக் கலிப்பா.

நண்போடு பகையதுவும் நம்மனதில் உறைப்பதற்கு
பண்புடைய சிறந்தவெண்ணம் பாங்கான காரணமாம்
அன்புறுமென் பெருமாற்கு அணிமனையா ளாவளெனும்
எண்புதிய தோற்றத்தா லிவளதிகம் சொந்தமானாள்.

வாசவதத்தை:— (தனக்குள்) அரச கன்னிகை என்றறிந்ததால் எனக்கு அவளுடன் சகோதரி நட்புத் தோன்றுகின்றது.

---

6. சமித்து—ஓமவிறகு. குசை—தருப்பை. *தருசகன்—மகத மன்னன். பத்மாபதியின் தமையன், ஆருணியை வெல்ல இவனது நட்புப்பெற உருமண்ணுவா எண்ணினன். †"செவிலித்தவ மகள் தேறக்காட்டி."
கோவின் மகள்—அரச குமாரி (பத்மாவதி).
7. எண்புதிய—புதிய எண்ணம்.

(பின்னர் பத்மாவதியும், ஒரு பாங்கியும், ஏனைய பரிவாரங்களும் வருகின்றனர்.)

பாங்கி:— அரசீ! இங்கே, இங்கே. இதோ ஆசிரமத்தில் எழுந்தருளுங்கள்.

(அப்பால் ஓர் தவமாது வருகிறாள்.)

தவமாது:— அரசகுமாரிக்கு நல்வரவு கூறுகின்றேன்.

வாசவதத்தை:— அந்த அரசகுமாரி இவள்தான். குலப் பெருமைக்கேற்ற உருவம் இவட்குளது.

பத்மாவதி:— பெருமாட்டி! என் வணக்கம் உரித்தாகுக.

தவமாது:— வருக, வருக. குழந்தாய்! நெடுநாள் வாழ்வாயாக. தபோவனம் விருந்தினர்க்குரிய இல்லமே.

பத்மாவதி:— சரி, பெருமாட்டீ! என் சந்தேகம் நீங்கிற்று. இக்கௌரவச் சொல்லினால் யான் அநுக்கிரகிக்கப்பட்டேன்.

வாசவதத்தை:— (தனக்குள்) உருவம் மட்டுமல்ல, இவளது சொற்களும் இன்பமாயிருக்கின்றன.

தவமாது:— (பாங்கியுடன்) பெண்மணீ! அரசன் தங்கையை இளவரசர் யாரும் மணம் செய்ய விரும்பவில்லையோ?

பாங்கி:— ஆம். உச்சைனியில் *பிரத்தியோதன் என்றொரு அரசன் உண்டன்றோ? அவர் தன் மகனுக்காகத் தூதர்களை அனுப்புகின்றனர்.

வாசவதத்தை:— (தனக்குள்) அவ்வண்ணமோ. ஆனால், இப்போது இவள் எனக்குச் சொந்தமாகிவிட்டாள்.

தவமகள்:— அப்பெருமைக்கு இவள் உரியவளே. இரு அரச குடும்பங்களும் மிக்க பெருமை வாய்ந்தன என்பது பிரசித்தம்தான்.

பத்மாவதி:— (மெய்காப்பாளனிடம்) பெருமானே! முனிவர்களைக் கண்டு அநுக்கிரகம் வாங்கினீர்களா? விரும்பியவை யளிக்க. முனிவர்களை யழைத்து யார் யாருக்கு என்ன வேண்டுமென்று கேட்க.

---

*பிரத்தியோதன்—வாசவதத்தையின் தந்தை.

மெய்காப்பாளன்:— பெருமாட்டியின் விருப்பம்போல். ஓ! ஆசிரமவாசிகளான முனிவர்களே! எல்லோரும் கேட்பீர்களாக. ஸ்ரீமதி மகதமன்னவன் மகள் இந்த பழக்கத்தால் மகிழ்ச்சியுற்று தருமப் பேற்றிற்கான தன தானம் செய்ய அழைக்கின்றனள்.

8. ஆசிரிய விருத்தம்.

கலசம் வேண்டும் என்றுலோ
 கழறு வீரே மனம்போலே
கலைகள் விருப்பம் உளதாமோ
 காதன் மிக்க குருமார்க்கு
பலவும் தக்ஷிணை தாமளிக்கப்
 பரிவுடன் எண்ணும் பொருள் யாதோ?
உலகு புரக்கும் மன்னவனுர்
 உத்தம மகளோ உளம் கொண்டாள்.

தொடர்ச்சி.

ஆவல் கொண் டரசியர் சொன்னுர்—தம்
 ஆன்மலாப வருளையே எண்ணி
வேண்டும் பொருளை யுரைப்பீர்—நாம்
 விருப்பமோ டவையினைத் தருவோம்.

யௌகந்தராயணன்:— (தனக்குள்) ஏற்றசந்தர்ப்பம் கிடைத்தது. (வெளிப்படையாக) ஐயா! நான் ஒன்று வேண்டுகிறேன்.

பத்மாவதி:— நற்பாக்கியந்தான். எனது தபோவன தரிசனம் பயனுடைத்தே.

தவமாது:— இவ்வாசிரம வாசிகள் பெரிதும் திருப்தியுடையவர்கள். இவர் இங்கு புதியவராயிருக்கவேண்டும்.

மெய்காப்பாளன்:— ஐயா! வேண்டுவதென்ன?

யௌகந்தராயணன்:— இதோ நிற்பவள் எனது சகோதரி. இவள் கணவர் மறு நாட்டிற்குப் போயிருக்கின்றனர். சிறிதுகாலம் அரச குமாரி இவளைக் காப்பாற்ற வேண்டுகிறேன். என்னவென்றுல்,

---

8. கழறுவீர்—கூறுவீர். கலைகள்—ஆடைகள். புரக்கும்—பாதுகாக்கும்.

9. கோச்சகக் கலிப்பா.

சுகபோகம் விரும்பவில்லை சொத்தோடு செல்வமதும்,
இகத்தின்கண் வயிறேம்ப இசைக்கவில்லை காவியுடை,
அகமதிலே வீரமுள்ளாள் அரசகன்னி யறமறிவாள்,
தகவாகப் பேணுவளே தங்கையாள் கற்பையெல்லாம்.

வாசவதத்தை:— (தனக்குள்) ஹா! பெருமான் யௌகந்தராயணற்கு என்னை இவள்பால் ஒப்புவிக்க வேண்டுமென்று விருப்பம்? சரி அவ்வாறாகுக. ஆராய்ச்சியின்றி யவர் எதுவும் செய்யார்.

மெய்காப்பாளன்:— பெருமாட்டி! பெருஞ் சுமையை நம்மீது வைக்க இப்பெரியார் எண்ணுகின்றனர். எங்ஙனம் வாக்களிக்கலாம்? ஏனென்றால்,

10. கலிவிருத்தம்.

தனத்தைக் கொடுக்கத் தடையேது மில்லை
சினத்தைக் கெடுக்கும் செழுந்தவ முயிரும்
மனத்தினுக் கொத்தன மற்று மளிப்பேன்
பணயத்தைக் காத்தல் பாடது வாமே.

பத்மாவதி:— பெருமானே! எத்தகைய விருப்பத்தையும் நிறைவேற்றுவதாய் அறிக்கை செய்துவிட்டு இப்போது பின்வாங்குவது முறையல்ல. இவர்கள் கூறுவதுபோல் செய்க.

மெய்காப்பாளன்:— தாங்கள் மேன்மைக் கொத்தே கூறினர்.

சேடி:— இவ்வாறு சத்திய நிஷ்டையுடைய இளவரசி நெடுநாள் வாழ்வார்களாக.

தவமாது:— பெருமாட்டி! நெடுநாள் வாழ்வீராக.

மெய்காப்பாளன்:— அவ்வாறாகுக. (மருங்கிற் சென்று) தங்கள் தங்கையின் பாதுகாப்பை அரசகுமாரி ஏற்றிருக்கின்றனர்.

---

9. அகம்—மனம்.
10. பணயம்—அடகு. பாடதுவாமே—வருத்தமாம்.

யௌகந்தராயணன்:— நான் அருள் பெற்றேன். குழந்தாய்! அரசகுமாரியின் மருங்கிற் செல்க.

வாசவதத்தை:— (தனக்குள்) என் செய்வேன். தீவினையுடைய யான் இதோ போகிறேன்.

பத்மாவதி:— வருக, வருக, தாங்கள் எனக்குச் சொந்த மானீர்கள்.

தவமாது:— இதுபோல்தான் இவள் தோற்றமும். இவளும் ஓர் வேந்தன் மகளாயிருக்கலாம் என்று தோன்றுகிறது.

சேடி:— தவமாதரார் அவர்கள் அருளியது சரிதான். இன்ப வாழ்விலிருந்தவரென்று எனக்கும் தோன்றுகின்றது.

யௌகந்தராயணன்:— (தனக்குள்) ஆகா! பாதிச் சுமை குறைந்தது. அமைச்சர்கள் சேர்ந்து யோசித்ததுபோல் முடிவுறும். எம் தலைவர் நாட்டை மீண்டும் பெற்று உறுதியுடன் வாழும்போது நான் வாசவதத்தா தேவியை அழைத்தேகுங்கால் சாட்சிப்படுத்த ஸ்ரீமதி மகத அரச குமாரியுளார். ஏனெனில்,

11. ஆசிரிய விருத்தம்.

மன்னவனூர் பத்மாவை மணந்திடுதல்
  உறுதியன்றோ? வருங்கே டுண்டு
என்னுமுறை விடுத்தவர்மேல் எழுந்தபெரும்
  நம்பிக்கை இருந்த தாலே
இன்ன செயல் தேறியானும் இயற்றிவிட்டேன்
  சோதனையும் இனிது பார்த்தேன்
சொன்னதொரு சித்தர்களின் சொற்களிலும்
  மாறுகச் சூழா தூழும்.

---

11. பத்மாவை—பத்மாவதியை. கேடு—நாட்டையிழத்தல். சித்தர்களின் வார்த்தைப்படி வாழுமிருக்கும். க்ஷேமேந்திரன் கூறுவதாவது, "நாரதன் கதாஸரித்ஸாகரத்தில் அரசனுக்குத்துன்பம் வருமென்று சொன்னான்" ஆனால், பத்மாவதியின் மணத்தைப்பற்றிக் கூறவில்லை. பத்மாவதியின் கணவன் ஓர் சக்கிரவர்த்தியாய் வருவானென்று சித்தர்கள் கூறியிருந்தனர்.

(பின்னர் வெளியில் ஓர் பிரம்மசாரி வருகிறான்.)

பிரம்மசாரி:— நேரம் நண்பகலாயிற்று. மிக்க களைப்பாயிருக்கின்றது. இனி எங்கிருந்து களைப்பாறலாம்? (சுற்றித்திரிந்து) ஆம். இது ஓர் தபோவனம். அதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. என்னவென்றால்,

12. எழுசீராசிரிய விருத்தம்.

அச்சம் மான்கட் கறவே இலவே
 ஆரும் துன்பம் இழையார்
மெச்சும் நம்புதல் மிகவே கொண்டு
 மேய்கின் றனவே மனம்போல்
உச்சம் மரங்கள் ஓயா மலர்கள்
 உளமகிழ் கனிகளும் உளவாம்
பச்சைக் கிளைகள் பலவே பாங்குடன்
 பாது காப்பும் உளவே.

கலித்துறை.

நிறமதில் கபிலை நேர்மைப் பசுக்கள் நிறையவுண்டு
திறமுடைப் பயிர்த்தொழில் செய்யும் நிலங்களோ
 மருங்கிலில்லை
துறவறம் கொண்ட தூயோர் வாழ்தவ வனமெனற்குக்
குறைவோ வில்லை கூட்டமா யெழும்பும் புகையெங்கும்.

இங்கே செல்வோம். (உள்ளே சென்று) சீ! இவர்கள் ஆசிரமத்திற்கேற்றவர்கள் அல்லரே. (வேறோரிடத்தை நோக்கி) ஓஹோ! தாபதர்களும் உளர். மருங்கிற் செல்லத் தடையில்லை. சீ! பெண்கள்.

மெய்காப்பாளன்:— அஞ்சவேண்டாம். வருக, வருக. ஆசிரமம் யாவருக்கும் பொது இடமன்றோ?

வாசவதத்தை:— (ஹூம்).

பத்மாவதி:— ஓஹோ! பெருமாட்டிக்கு வேற்றுடவர் தரிசனம் விருப்பக்கேடாக விருக்கலாம். யான் ஏற்ற பணயத்தை எளிதில் காப்பாற்றலாம்.

---

12. ஆரும்—யாரும்.

கபிலை—கருமைகலந்த பொன்மைநிறம்; கபிலைநிறப்பசு விசேடம் என்பர்.

சேவகன்:— ஐயா! யாங்கள் முன்னரே வந்துள்ளோம். உபசரிப்பதை யேற்றுக்கொள்வீராக.

பிரம்மசாரி:— (ஆசமனம் செய்தபின்) ஆகலாம், ஆகலாம். என் களைப்பு நீங்கிற்று.

யௌகந்தராயணன்:— தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்? எங்கே செல்கிறீர்கள்? உறைவிடம் எங்கே?

பிரம்மசாரி:— சொல்கிறேன். யான் அரண்மனையினின்றும் வருகிறேன். வத்ஸ நாட்டில் இலவாணம் என்னுமூரில் மறையோத அங்கு சென்று தங்கினேன்.

வாசவதத்தை:— (சிந்திக்கிறாள்) ஹா! இலவாணகமா? அப்பெயர் கேட்டபொழுதே எனது துன்பம் மீண்டும் புதிதானதுபோல் தோன்றுகின்றது.

யௌகந்தராயணன்:— சரி. கல்விப் பயிற்சி முடிவுற்றதோ?

பிரம்மசாரி:— முடியவில்லை.

யௌகந்தராயணன்:— படிப்பு முடிவுறவில்லையானால் எதற்காகத் திரும்பினீர்கள்?

பிரம்மசாரி:— அங்கு மிகக் கொடியதோர் ஆபத்து நிகழ்ந்தது.

யௌகந்தராயணன்:— நிகழ்ந்த ஆபத்து என்னை?

பிரம்மசாரி:— உதயணன் என்ற மன்னர் அங்கு வந்து தங்கினர்.

யௌகந்தராயணன்:— ஸ்ரீமான் உதயணனைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கட்கென்ன?

பிரம்மசாரி:— அவந்தியரசன் புதல்வி, வாசவதத்தை என்னும் மனைவியினிடம் அவர்க்கு மிக்க காதல் உளது.

யௌகந்தராயணன்:— இருக்கலாம். பின்னை, பின்னை, எஞ்சிய சொல்லுங்கள்.

பிரம்மசாரி:— அன்னார் வேட்டைக்குச் சென்ற காலையில் அவ்வூர் தீப்பற்றியதால் வாசவதத்தை எரிந்து போயினள்.

வாசவதத்தை:— (தனக்குள்) பொய், பொய். அபாக்கிய வதியான யான் இதோ உயிரோடிருக்கிறேன்.

யௌகந்தராயணன்:— பின்னர், பின்னர்.

பிரம்மசாரி:— அரசியைக் காப்பாற்றச் சென்றதில் அமைச்சன் யௌகந்தராயணனும் நெருப்பில் குதித்தான்.

யௌகந்தராயணன்:— குதித்தான் என்பது உண்மைதானா? அப்பால்?

பிரம்மசாரி:— அரசன் மீண்டு வந்து இச்செய்தியறிந்த பொழுது இருவர்களின் பிரிவாற்றாமைக் கஞ்சி வருந்தி உயிர் துறக்கத் தீயில் குதிக்க உன்னினான். எனினும் அமைச்சர்கள் மிகக் கஷ்டப்பட்டுத் தடுத்தனர்.

வாசவதத்தை:— (தனக்குள்) தலைவற்கு என்னிடம் அளவற்ற அன்பு உளதென்று யான் நன்கறிவேன்.

யௌகந்தராயணன்:— பிறகு. மிகுதியும் சொல்லுங்கள்.

பிரம்மசாரி:— பின்னர் அரசி யணிந்த அணிகலன்களில் தீயிலுருகி அழிவுறாதவைகளை யெடுத்து மன்னர்பிரான் மார்போடணைத்துக்கொண்டு மூர்ச்சையானார்.

எல்லோரும்:— கஷ்டம்!

வாசவதத்தை:— (சிந்திக்கிறாள்) பெருமான் யௌகந்தராயணன் திருப்தி எய்துக.

சேடி:— இளவரசீ! பெருமாட்டியழுகின்றனளே.

பத்மாவதி:— நெஞ்சில் வஞ்சமில்லா சாது. தயவினாலாயிருக்கலாம்.

யௌகந்தராயணன்:— ஆம்! ஆம். என் தங்கை இயற்கையிலேயே தயவுள்ளவள். பாவம். பின்னர் என்னை?

பிரம்மசாரி:— பிறகு மெல்ல அரசனுக்கு உணர்வு வந்தது.

பத்மாவதி:— (தனக்குள்) நற்காலம். ஜீவித்திருக்கிறாரல்லவா? மூர்ச்சையானார் என்றபொழுது என் மனம் சூனியமாயிற்று.

யௌகந்தராயணன்:— பின்னர்?

பிரம்மசாரி:— அரசன் தரையில் உருண்டு உடம்பெலாம் தூசு படிந்தது. மீண்டும் எழுந்து என் வாசவதத்தாய்! அவந்தி அரசன் மகளே! என் இன்பமே! என் அருமை மாணவியே! என்றிவ்வாறு பன்முறை புலம்பினான். என் மிகுதி?

13. ஆசிரிய விருத்தம்.

இல்லை சக்கிர வாக
மிதுபோல் இன்னாள் தன்னில்
இல்லை சிறந்த நல்லார்
பிரிவில் இவ்வா றுள்ளார்
இல்லாள் பெரியள், இடைவிடா
தெண்ணும் இசைந்த கணவனால்
நல்ல பதியின் நண்பால்
நளியெரி புகினும் எரிந்திடாள்.

யௌகந்தராயணன்:— பின் அமைச்சர்கள் ஒருவரும் அரசனைச் சமாதானப்படுத்த முயலவில்லையோ?

பிரம்மசாரி:— முயலாமலில்லை. ருமண்வான் என்னும் மந்திரி பெரிதும் முயன்றான். அவன்—

14. ஆசிரிய விருத்தம்.

நிலமாளும் மன்னவர்க்கு நேராக
ஊணுறக்கம் நித்ய கன்மம்
பலவான செய்திடாது பளபளக்கும்
முகம்வாடிப் பாயும் கண்ணீர்
பலமான தொண்டியற்றிப் பகலிரவும்
தன்னரசைப் பாலிக் கின்றான்
சலமான ஆவியினைத் தரணிபதி
விட்டிடிலோ தானும் மாள்வான்.

யௌகந்தராயணன்:— (தனக்குள்) உருமண்ணுவானது பொறுப்புமிகவும் பெரிதே.

---

13. சக்கிரவாகப்புள்ளின் பிரிவாற்றுமை பிரசித்தமானது. "According to a poetic convention, the Cakravaka and his mate keep together during day-time, but have to separate after sunset".

நல்லார்—பெண்கள். நளியெரி—கட்டத்தீ.

15. நேரிசைவெண்பா.

எந்தன் பொறுப்போ எளிதென்றே யெண்ணுகின்றேன்
அந்தமில் பாரம் அவன்றலைமேல்—வந்ததுவே
மன்னவனும் யாரிடமே சார்புவைத்துக் கொண்டானே
அன்னவன் மேலாம் அனைத்து.

(வெளிப்படையாக) இப்போது அவர்க்குச் சமாதானம் வந்ததா?

வாசவதத்தை:— (தனக்குள்) பாக்கியம் நல்ல பாதுகாவலில் தான் பெருமானிருக்கிறார்.

யௌகந்தராயணன்:— (தனக்குள்) ஐயோ பெரும் பாரத்தை உருமண்வான் தாங்குகின்றான்.

பிரம்மசாரி:— இப்பொழுதுள்ள நிலை எனக்குத் தெரியாது. "இங்கேதான் அவளுமாகச் சிரித்தேன். இவ்விடமே அவளுடன் சரசசல்லாபம் செய்தது. இங்குதான் அவளொடு இருந்தேன். இவ்விடத்தில் வைத்தே ஊடல் கொண்டனள். இங்குதான் அவளுடன் சயனித்தேன்" என்று இவ்வாறாக கழிந்தவைகளைப்பற்றி எண்ணியெண்ணி ஏங்கியிருந்த மன்னனை அமைச்சர்கள் மிக்கப் பிரயாசையுடன் ஒருவாறு தேற்றி வேறொருவூருக்கு அழைத்துச் சென்றனர். அரசன் அகன்றபோது மீன்களும் மதியும் இல்லா வானம்போல் *அச்சிற்றூர் பொலிவிழந்தது. பின்னர் யானும்போந்தேன்.

தவமாது:— அரசன் நல்லவன்தான். பிறநாட்டவனான இம் மனிதனும் அரசனைப் புகழ்கிறானென்றால் அவ்வேந்தன் மிகச்சிறந்தவனாக இருக்கவேண்டும்.

---

15. அரசன்பாதுகாப்பு யாரிடமோ அவர் தலைமேல் எல்லாப் பொறுப்பும் வரும்.

சலமான—சஞ்சலமான

இலாவாணகம் இங்கே சிற்றூராகச் சொல்லப்படுகிறது. பெருங் கதையில் உதயணனது பெரிய நகரங்களுள் ஒன்றெனவும் போரண் உடையதெனவும் கூறுவர்.

*"ஆரணமைத்த வாண்டு நீண்மதில் ஏரணியுடைய விலாவாணகமெனும் ஊர்வயினின்றும் வந்து" (பெருங்கதை)

சேடி:— இளவரசி! வேறோர் பெண் அவர் கையைப் பிடிப்பாளோ?

பத்மாவதி:— (சிந்திக்கிறாள்) நான் எண்ணியதுபோல்தான் இவள் வினவினாள்.

பிரம்மசாரி:— நான் தங்கள் இருவரோடும் விடைபெற்றுக் கொள்கிறேன். யான் செல்கிறேன்.

இருவரும்:— காரியம் வெற்றிபெறச் செல்வீராக!

(பிரம்மசாரி போகின்றான்)

யௌகந்தராயணன்:— நல்லது. குமாரியினிடம் விடைபெற்றுப்போக எண்ணுகிறேன். யானும் போய்வருகிறேன்.

மெய்காப்பாளன்:— இவர் யாத்திரை செல்ல விடை கேட்கிறார்.

பத்மாவதி:— பெருமானைவிட்டுப் பிரிவதில் தங்கைக்கு வருத்தமேற்படும்.

யௌகந்தராயணன்:— நல்லோர்களைச் சார்ந்ததால் அவட்கு மனவருத்தமில்லை. (மெய்காப்பாளனிடம்) யான் செல்லலாமோ?

மெய்காப்பாளன்:— செல்க. திரும்பக்காணும்படி தாங்கள் செல்க.

யௌகந்தராயணன்:— அவ்வாறே. (போகிறான்)

மெய்காப்பாளன்:— ஆசிரமத்திற்குள் செல்லும் நேரமாயிற்று.

பத்மாவதி:— (தவமாதினிடம்) பெருமாட்டியை யான் வணங்குகிறேன்.

தவமாது:— குழந்தாய்! உனக்கேற்ற கணவனைச் சேருவாயாக.

வாசவதத்தை:— பெருமாட்டியை யான் வணங்குகின்றேன்.

தவமாது:— விரைவில் தலைவனைச் சேரக்கடவாய்.

வாசவதத்தை:— நான் அனுக்கிரகிக்கப்பட்டேன்.

மெய்காப்பாளன்:— என்றால் எழுந்திருக்கலாம். பெருமாட்டி இவ்வழியே, இவ்வழியே. இப்பொழுது,

16. நேரிசையாசிரியப்பா.

பறவை கூட்டிற் பதிவுபோல் சேர்ந்தன;
நீரில் மூழ்கினர் நின்மல முனிவரும்;
படர்ந்தது புகையும் பரமுனி வனத்தில்;
அடர்ந்தது எரியும் அதிக ஒளியாய்;
சூடு குறைந்து, சுருங்கின கதிர்களும்;
சூரியன் சாய்ந்தனன் சுயமாய்த்தொலையில்
சீரிய தேரின் செலவோ
அசதியாம்; அமைதியாய் அடைமலை அடைந்ததே.

(எல்லோரும் சென்றனர்.)

[முதல் அங்கம் முற்றிற்று.]

இரண்டாம் அங்கம்.

(ஒரு சேடி வருகிறாள்.)

சேடி:— குஞ்சரிகே! குஞ்சரிகே! பத்மாவதி இளவரசி எங்குற்றனள்? என்ன சொல்லுகின்றாய்? இதோ மாதவீ முல்லைக் கொடியின் மருங்கில் பந்தாடுகின்றாள் என்று? ஆனால் அங்கு செல்வோம். (சுற்றிப் பார்த்து) ஆம்! இதோ இளவரசி காதணியை மேலே உயர்த்தி, தேகப் பயிற்சியால் வியர்வையணிந்து, களைப்பினால் அழகு விளங்கும் நன்முகத்தோடே இங்கு வருகின்றனள். அருகே செல்வோம்.

(போயினர்.)

வருகை. (பிரவேசகம்.)

(அதன் பின் பந்தடித்துவிட்டு பத்மாவதியும், பரி சனங்களும், வாசவதத்தையும் வருகின்றனர்.)

வாசவதத்தை:— இதோ! தோழியின் பந்து.

பத்மாவதி:— பெருமாட்டி! நிறுத்துங்கள். இப்போது போதும்

வாசவதத்தை:— நீண்டநேரம் பந்தடித்து கை நன்றாய்ச் சிவந்துவிட்டதால் தோழியின் கைகள் வேறொருவரது என்று தோன்றும்.

சேடி:— விளையாடுங்கள். இளவரசி கன்னிப் பருவத்தால் அழகான இக்காலம் கழியட்டும்.

பத்மாவதி:— பெருமாட்டீ! ஏன் என்னைக் கேலி செய்வது போல் இப்போது நுட்பமாய்ப் பார்க்கிறீர்கள்?

வாசவதத்தை:— அங்ஙனமன்று. இப்போது ஒரு விசேட அழகு தோன்றுகின்றது. எனக்குத் தோழியின் செவ்விய முகம் நாற்பக்கமும் காண்பதாய்த் தோன்றுகின்றது.

பத்மாவதி:— போங்கள். வீணாகப் பரிகாசம் செய்ய வேண்டாம்.

வாசவதத்தை:— நான் ஒன்றும் பேசவில்லை. மகாசேனனது மாட்டுப் பெண்ணே!

பத்மாவதி:— யார் அம்மகாசேனன்?

வாசவதத்தை:— உச்சைனியில் "பிரத்யோதன்" என்றோர் அரசனுண்டு. அன்னாருக்குப் படையின் பலத்தால் மகா சேனன் என்று வெற்றிப் பெயர் கிடைத்தது.

பிரவேசம்:— இரண்டு அங்கங்களை ஒன்றுசேர்க்கும் முன்னுரையாம். பிரவேசகத்தில் நடிப்பது தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த நடிகர்களாகும். அவர்கள் பிராகிருத மொழியில் பேசுவர்.

பிரவேசகமும் விஷ்கம்பமும் ஒன்றுதான். இரு அங்கங்களின் நடுவிலும் வரும். முதலங்கத்தில் விஷ்கம்பம் வாராது.

சேடி:— அவ்வரசனோடுள்ள பந்தம் இளவரசிக்கு வேண்டாம்.

வாசவதத்தை:— என்றால் வேறு யாரிடம் வேண்டும்?

சேடி:— வத்ஸ நாட்டில் உதயணன் என்றோர் அரசன் உண்டன்றோ? அம்மன்னனது குணங்களில்தான் அவர்களுக்கு அதிக விருப்பம்.

வாசவதத்தை:— (சிந்திக்கிறாள்) என் நாயகன் கணவனாய் வரவேண்டுமென்றுதான் அவா. (வெளிப்படையாக) ஏன்?

சேடி:— தயவுடையார் ஆனதினால்தான்.

வாசவதத்தை:— (தனக்குள்) ஆம், ஆம். எனக்கும் இவ்வாறுதான் பைத்தியம் பிடித்தது.

சேடி:— பெருமாட்டீ! அவ்வரசன் அழகற்றவனானால்?

வாசவதத்தை:— இல்லை, இல்லை. கண் கவர் வனப்பன்.

பத்மாவதி:— பெருமாட்டிக்கு எவ்வாறு தெரியும்?

வாசவதத்தை:— (சிந்திக்கிறாள்) காதலன் மீதுள்ள அளவற்ற அன்பினால் சொல்லிவிட்டேன். இனி என் செய்வது? ஆம் வழியுளது. (வெளிப்படையாக) இது உச்சைனி மக்கள் பேச்சாகும்.

பத்மாவதி:— உச்சைனி மக்கள் அன்னவரைக் காணாதவர்களல்லவே. மக்கள் அனைவரும் விரும்புவது அழகேயாம்.

சேவிலி:— (வந்து) குமாரி எல்லாப் பெருமைகளுடன் வாழ்வாளாக! குமாரிக்குக் கன்னிகாதானம் நடந்துவிட்டது.

வாசவதத்தை:— அம்மணீ! யாருக்கு?

சேவிலி:— வத்தவ வேந்தன் உதயணனுக்கு.

வாசவதத்தை:— அம்மன்னன் நலமாய் இருக்கிறாரா?

சேவிலி:— நலம்தான். அவர் இங்கு வந்திருக்கிறார். குமாரியை அன்னவர்க்குக் கொடுக்க வாக்களித்தாயிற்று.

வாசவதத்தை:— அது மிகக் கஷ்டம்.

சேவிலி:— என்ன அதில் கஷ்டம்?

வாசவதத்தை: வேறொன்றுமில்லை. அத்துணை பெரிய துன்பம் ஏற்பட்டும் சீக்கிரம் மறந்துவிட்டாரே என்று.

சேவிலி:— பெரியார் மனம் சாத்திரம் நிறைந்தது ஆதலால் விரைவில் சாந்தியடையும்.

வாசவதத்தை:— உண்மைதானா? அவர் மணம் விரும்பினார் என்பது.

சேவிலி:— அவ்வாறன்று; அவ்வாறன்று. ஏதோ காரணத்தால் இங்கு வந்தபோது உருவம், பருவம், குலம், அழகு இவையின் ஒற்றுமை நோக்கி மன்னர்பிரான் குமாரியை அளித்ததாகும்.

வாசவதத்தை:— (சிந்திக்கிறாள்) அவ்வண்ணமா? இதில் பெருமான் குற்றவாளியன்று.

வேறொரு சேடி:— (வந்தனள்) விரைவில், விரைவில் இன்று நல்லநாள். காப்புக் கட்ட இன்றுதான் நன்முழுத்தம் என்று மகாராணி அருளிச் செய்திருக்கின்றனர்.

வாசவதத்தை:— (சிந்திக்கிறாள்) இவர்கள் எவ்வளவு ஆத்திரப்படுகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு என் மனம் இருளடைகின்றது.

சேவிலி:— வருக! வருக!! இளவரசீ!

(எல்லோரும் ஏகினர்.)

[இரண்டாமங்கம் முற்றிற்று.]

மூன்றும் அங்கம்

(பின்னர் மனோராஜ்யத்துடன் வாசவதத்தை.)

(வருகிறாள்.)

வாசவதத்தை:— திருமணக் கொண்டாட்டம் மிக்கிருக்கும். அரண்மனையந்தப்புரத்தைவிட்டு பத்மாவதியைப் பிரிந்து யான் இப்பிரமத வனத்திற்கு வந்துவிட்டேன். இனிமேல் ஊழின் வலியால் உற்ற துன்பத்தை ஆற்றுவோம். (சுற்றித் திரிந்து) ஹா! கொடும் துன்பம். என் காதலனும் மற்றொருவர்க்காய் விட்டாரே. இங்கே உட்காருவோம். (இருந்தபின்) சக்கிரவாகப் பெடையே பாக்கியசாலி. இணைபிரிந்தால் அது உயிர் வாழாது. யான் இதுகாறும் உயிர் விடவில்லையே. காதலனைப் பார்க்கவாவது செய்யலாம், என்னும் ஆசையால்தான்! உயிர்வாழ்கின்றேன். (பின் பூப்பறித்துக்கொண்டு ஒரு சேடி வருகின்றாள்.)

சேடி:— பெருமாட்டி! *ஆவந்திகை எங்கு சென்றனள்? (அலைந்து திரிந்து பார்த்து) பெருமாட்டி இதோ மனோராஜ்யத்தில் மூழ்கி, மனம் சோர்ந்திருக்கிறாள். மூடு புயலில் மறைந்த திங்களைப்போல் அலங்காரமற்ற அழகிய வேடத்துடன் ஓர் செடியின் அடியில் பாறையின்மீதுட்கார்ந்திருக்கிறாள். அருகிற் செல்வோம். (அருகிற் சென்று) சீமாட்டியை எவ்வளவு நேரமாய்த் தேடுகின்றேன்?

வாசவதத்தை:— எதற்காக?

சேடி:— பெருங்குடிப் பிறப்பும், அன்பும் திறமையும் உன்னி மணமாலை கட்டுவது தாங்கள்தான் (பெருமாட்டி) வேண்டுமென்று அருளியிருக்கின்றனர்.

வாசவதத்தை:— யாருக்கு மாலை கட்டவேண்டும்?

பிரமதவனம்—பெண்களுக்குரிய பூந்தோட்டம்.

*ஆவந்திகை—வாசவதத்தை. "ஆராக்காதல் அவந்திகை தன்னையும்." பெருங்கதை.

புயல்—மேகம். திங்கள்—சந்திரன்.

சேடி:— நமது இளவரசிக்குரியது.

வாசவதத்தை:— (சிந்திக்கிறாள்) இதுவும் யான் செய்யவேண்டுமா? தெய்வங்கள் இரக்கமற்ற கொடியவர்கள்தான்.

சேடி:— இப்போது வேறு ஒன்றும் எண்ணவேண்டாம். மணமகன் மணநீராடி வரலாயிற்று. விரைவில் மாலை கட்டுங்கள்.

வாசவதத்தை:— (தனக்குள்) எனக்கு வேறொன்றும் எண்ண வியலாது. (வெளிப்படையாக) மாப்பிள்ளையைப் பார்த்தாயா?

சேடி:— இளவரசிமீதுள்ள அன்பினாலும், எங்களது மோகத்தாலும் பார்த்தேன்.

வாசவதத்தை:— மாப்பிள்ளை எப்படி?

சேடி:— நான் சரியாகச் சொல்லுகிறேன். இவ்வாறு ஒருவரை நான் பார்த்ததேயில்லை.

வாசவதத்தை:— சொல், சொல். பார்த்தால் அழகன்தானா?

சேடி:— வில்லும், அம்பும் இல்லாத தேவன் மன்மதன் என்றே சொல்லலாம்.

வாசவதத்தை:— போதும்.

சேடி:— பெருமாட்டி! ஏன் தடுக்கின்றீர்?

வாசவதத்தை:— வேற்றுடவர் வருணனை கேட்கலாகாது.

சேடி:— ஆனால் விரைவில் மாலைகட்டுங்கள்.

வாசவதத்தை:— இங்கே கொடு. (சிந்திக்கிறாள்) இதோ! பாக்கியமில்லாத யான் கட்டுகிறேன். (ஏதோ ஒன்று பூமியிலிட்டுப் பார்த்துவிட்டு) இம்மருந்து என்ன?

சேடி:— "அவிதவாகரணம்" என்று சொல்லும் ஓர்வுகை மருந்து.

வாசவதத்தை:— (சிந்திக்கிருள்) ஆனல் அதிகம் சேர்க்க வேண்டும். எனக்கும் பத்மாவதிக்கும் வேண்டுமன்ரோ? (வேருெரு பச்சிலையை எடுத்து) (வெளிப்படையாக) இது என்ன செடி?

சேடி:— இதைச் "சக்களத்தி மர்த்தனம்" (ஸபத்னீ மர்த்தனம்) என்பர்.

வாசவதத்தை:— என்ருல் இது வேண்டாம்.

சேடி:— ஏன்?

வாசவதத்தை:— அவர் மனைவி மாண்டுவிட்டாளே அதனல் அவசியமில்லை.

(வருகிருள்.)

வேருெரு தோழி:— (வந்து) பெருமாட்டி! விரைவில் கட்டுக. மங்கலப் பெண்கள் மணமகனை உள்ளே அழைத்துச் செல்கின்றனர்.

வாசவதத்தை:— விரைவில் கட்டுகிறேன். இதோ! கொண்டு செல்க.

சேடி:— நல்லது பெருமாட்டி! யானும் செல்கிறேன்.

வாசவதத்தை:— அவர்கள் போய்விட்டனர். அந்தோ! பெரும் துன்பம்! கண்ணுளனும் வேருெருவர்க்கானர். துன்பம் தீர்க்கச் சென்று துயில் செய்வோம். உறக்கம் வந்தால் நல்லது.

(போயினள்.)

[மூன்றும் அங்கம் முற்றிற்று.]

நாலாம் அங்கம்.

(பின் விதூடகன் வருகிறான்.)

விதூடகன்:—(மகிழ்ச்சியுடன்) நற்காலம்; வத்தவ மன்னர் பிரானது பிரிய திருமணத்தின் அழகிய காலம் கண்ணுற நேர்ந்ததே. மிகப் பெரிய ஆழமான இடையூற்றுச் சுழியிற் பட்டு யாங்கள் கரையேறுவோமென்று யார் கருதினர். இப்பொழுது அரண்மனையில் தங்குகிறோம். அந்தப்புர நீராழிகளில் குளிக்கிறேன். மதுரமும், மெதுவுமான சிற்றுண்டிகளைச் செலுத்துகிறேன். அதிகமேன்? அப்ஸரபெண்கள் மட்டும் இல்லாத உத்தர குருவாசந்தான் யான் அனுபவிக்கிறேன் ஒரு பெருங்குற்றமுள்ளது. எனக்கு உண்டிகள் சரியாய் செரிப்பதில்லை. நல்ல விரிப்புகளிட்ட படுக்கையில் படுத்தாலும் உறக்கம் வருவதில்லை. இரத்தவாத நோய் சுழன்று வருவதாய்த் தோன்றுகின்றது. சீ! நோய் வருவதும், காலையுணவை வெறுப்பதும் சுகமில்லை.

(பின் ஒரு சேடி வருகின்றாள்.)

சேடி:—பெருமான் வசந்தகர் எங்குற்றார்? (சுற்றிப்பார்த்து) ஓகோ! இதோ பெருமான். (அருகிற் சென்று) வசந்தகப்பெரியோய்! தங்களை யான் எவ்வளவு நேரமாய்த் தேடுகின்றேன்.

விதூடகன்:— (பார்த்துவிட்டு) எதற்காக அம்மா என்னைத் தேடினீர்கள்?

சேடி:—நமது மகாராணி மாப்பிள்ளை நீராடி விட்டனரோவென்று வினவுகின்றனர்.

விதூடகன்:—ஸ்ரீமதி ஏன் கேட்கின்றார்கள்?

உத்தரகுருக்ஷேத்திரம் = தேவபூமி. அதில் சுவர்க்கவாழ்வு சுகம் உண்டென்பர். இமையத்தின் வடக்காம். அங்கு பெண்கள் நல்ல அழகுடையார். செரித்தல்—ஜீரணித்தல்.

சேடி:—மற்றென்னை? பூவும் வாசனைப்பெருள்களும் கொண்டு வரவேண்டும்.

விதூடகன்:—தோழர் நீராடிவிட்டனர். உணவு நீங்கலாக எல்லாம் கொண்டுவருக.

சேடி:—உணவு மட்டும் ஏன் வேண்டாம்?

விதூடகன்:—குயிலின் கண்விழிபோல் என் வயிற்றில் ஒரு சுழற்றல் உளது.

சேடி:—பெருமானுக்கு அவ்வாறு வரவேண்டியதுதான்.

விதூடகன்:—நீ செல்க. யானோ தோழரின் மருங்கு செல்கின்றேன். (இருவரும் சென்றனர்.)

பிரவேசகம்.

(அதன்பின் பத்மாவதியும், பரிவாரங்களும் வாசவதத்தையும் வருகின்றனர்.)

சேடி:—இளவரசி பிரமத வனத்திற்கு எதன்பொருட்டு வந்தீர்கள்?

பத்மாவதி:—அச்சேமந்திச் செடிகள் பூத்தனவோ இல்லையோவென்று பார்ப்பதற்காகத்தான்.

சேடி:—இளவரசி! அவை பூத்துவிட்டன. முத்தும் பவளமும் கலந்து கோத்த மாலைகள்போல் பூக்கள் நிரம்பி இருக்கின்றன.

பத்மாவதி:—ஆனால் இனி ஏன் காலம் தாழ்த்தவேண்டும்?

சேடி:—இளவரசீ! இக்கல்தரையில் சிறிதுநேரம் உட்கார்ந்திருப்பீர்களாக. அடியேன் சென்று பூக் கொய்து வருகின்றேன்.

பத்மாவதி:—பெருமாட்டி! இங்கே உட்காரலாமே.

வாசவதத்தை:—அவ்வாறாகலாம்.

(இருவரும் உட்கார்ந்தனர்.)

சேடி:—(பூப்பறித்துக்கொண்டு வந்து) பாருங்கள்! இளவரசி பாருங்கள்! பட்டம் தேய்த்த காதணியிற்போல் எனது கை நிறைய சோபாலிகைப் பூக்கள்.

பத்மாவதி:—(பார்த்துவிட்டு) ஹா! பூக்களின் பலவித நிற அழகைப் பெருமாட்டி பாருங்கள்.

வாசவதத்தை:—ஹா! பூக்கள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன.

சேடி:—இளவரசி! இன்னும் பறிக்கவேண்டுமா?

பத்மாவதி:—வேண்டாம். இனிப் பறிக்கவேண்டாம்.

வாசவதத்தை:—ஏன் தடுக்கின்றீர்கள்?

பத்மாவதி:—பெருமான் இங்கு வந்து இப்பூக்களின் மிகுதியைக் கண்டு என்னை வெகுமானிக்கவேண்டும்.

வாசவதத்தை:—பெருமாட்டிக்கு காதலன் பிரியந்தானு?

பத்மாவதி:—எனக்குத் தெரியாது. அன்னவரைக் காணுவிட்டால் எனக்கு வருத்தமாயிருக்கின்றது.

வாசவதத்தை:—(தனக்குள்) யான் செய்வது கொடுமைதான். இவள் கூட இவ்வாறு கூறுகின்ருள்.

சேடி:—குலத்திற் கொத்து இளவரசி கூறினர். எனக்கு நாயகன் பிரியன் என்று மிகவும் சந்தோஷமாகக் கூறினர்.

பத்மாவதி:—எனக்கு ஒரு சந்தேகம் உளது.

வாசவதத்தை:—என்னே? என்னே?

பத்மாவதி:—பெருமான் எனக்கு எப்படியோ அதுபோல்தானு அக்காள் வாசவதத்தைக்கும்?

வாசவதத்தை:—இதைவிடக் கூடுதல்.

பத்மாவதி:—பெருமாட்டிக்கு எவ்வாறு தெரியும்?

வாசவதத்தை:—(சிந்திக்கிருள்) தலைவன் மீதுள்ள காதலினுல் மிகுதியாய்க் கூறிவிட்டேன். இனி இவ்வாறு கூறுவோம். (வெளிப்படையாக) சிநேகம் குறைவானுல் சொந்த ஆட்களை விட்டுப்போகமாட்டார்.

பத்மாவதி:—சரிதான்.

சேடி:—பெருமாட்டி! மன்னனிடத்தில் நன்றாய்க் கூறுக. எனக்கும் வீணைவாசிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று,

பத்மாவதி:—அது யான் பெருமானிடம் சொல்லியாயிற்று.

வாசவதத்தை:—அப்பொழுது பதில் என்ன சொன்னார்?

பத்மாவதி:—ஒரு பெருமூச்சு விட்டு மௌனமாயிருந்தார்.

வாசவதத்தை:—தோழி! என்ன ஊகிக்கிறீர்கள்?

பத்மாவதி:—அக்காள் வாசவதத்தையின் குணங்களை உன்னி இரக்கத்தினால் அழுவில்லை என்றுதான் நினைக்கிறேன்.

வாசவதத்தை:—(சிந்திக்கிறாள்) இது உண்மையாயின் யான் பாக்கியவதியே.

(பின் விதூடகனும், அரசனும் வருகிறார்கள்.)

விதூடகன்:—ஆகா! செழிப்பாகப் பூத்துச் சிதறிக்கிடக்கும் செம்பருத்திப் பூக்களால் செறிவுற்றது இப்பிரமதவனம். தோழரே! இவ்வழியே, இவ்வழியே செல்க.

அரசன்:—நண்பா! வசந்தக! யான் இதோ வருகிறேன்.

1. கண்டேன்யான் உச்சயினி கவினுடைய
நகரமதில் கன்னிப் பெண்ணை
கொண்டேனே யவந்திகைமேற் குலைவதரும்
மனக்கவலை; கோலைப் பார்த்து
விண்டானே மன்மதனும் விசையுடனே
ஐயம்பும் வேகும் மார்பில்
பண்டேபோல் இன்றளவும் பதிந்து நிற்கும்
பின்னாலும் பாணம் போட்டான்.

தொடர்ச்சி.

*ஐயம்பன் அனங்கன்
மெய்யாக வென்றாலோ
பெய்தது எங்ஙனே
வெய்தான ஆறம்பு.

---

*ஐந்தம்புதான் மன்மதனுக்குண்டென்றால் ஆறாவது அம்பு எப்பொழுது வந்தது. அவந்திகை—அவந்திநாட்டுப்பெண் வாசவதத்தை. கோலை—கொள்ளுதலை.

விதூடகன்:—பெருமாட்டி, பத்மாவதி எங்கு சென்றனர்? வல்லி மண்டபத்திற்குச் சென்றிருக்கலாம். அல்லது வேங்கை மலர் வீழ்ந்து புலித்தோல் விரித்ததுபோன்று விளங்கும் பர்வத திலகமென்னும் பாறையின்மேல் வீற்றிருக்கலாம். அல்லது பெருமணம் எழும் பாலை மரத் தோட்டத்திற்கு ஏகியிருக்கலாம். அன்றேல் விலங்குகளினுடையவும் பறவைகளினுடையவும் படமெழுதியிருக்கும் தாரு பர்வதத்தில் இருக்கலாம். (மேலே நோக்கி) ஆஹா! மாரிக்காலத்தில்தூய வானில் பலதேவன் கைகளை நீட்டியிருக்கின்றானோவென்று தோற்றுமாறு வெண்ணாரைப் பறவைகள் வரிசையாய் பறக்கின்றன நண்பரே! பாருங்கள்.

அரசன்:—யான் பார்க்கின்றேன். அவை இதோ பறக்கின்றன.

2. ஆசிரிய விருத்தம்.

நேராய் நீண்டும் இடைவிட்டும்
நிமிர்ந்தும் தாழ்ந்தும் எழுமுனிபோல்
சீராய் வளைந்தும் திருப்பின்கண்
செல்கின்றனவே தூய வெண்மை
ஏரார் சட்டை கழற்றினபின்
இருக்கும் பாம்பு களைப்போன்று
*பாராய் எல்லை வானமதில்
பகுக்கும் நிலையில் விளங்கிற்றே.

பாங்கி:—பாருங்கள், பாருங்கள் இளவரசி! தாமரைப் பூமாலை போன்று வெண்மையும் அழகும் வாய்ந்து மெதுவாய்ப் பறக்கும் வெண்ணாரைப் பறவைகளின் கூட்டத்தை. ஓ! அரசன்.

---

2. எழுமுனி—எழு முனிவர். ஸப்தர்ஷி மண்டல நட்சத்திரங்களின் நிலைமைக்கொத்த வளைவு. சட்டை கழற்றிய பாம்பின் அடி வயிறுபோல் மாசில்லாமல் வெண்மையானது.

*வானத்தைப் பகுக்கின்ற ஒரு கோடுபோலவும் வெண்ணாரைகள் பறக்கின்றன.

பத்மாவதி:—ஓஹோ! பெருமானோ? பெருமாட்டி! தங்களுக்காக மன்னர்பிரான் முன்னர் போகவில்லை. நாம் முல்லை மண்டபத்திற்குச் செல்வோம்.

வாசவதத்தை:—அவ்வாறே (கூறியதுபோல் சென்றனர்.)

விதூடகன்:—ஸ்ரீமதி பத்மாவதி இங்கு வந்துவிட்டுத் திரும்பப் போயிருக்கவேண்டும்.

அரசன்:—எவ்வாறறிந்தீர்கள்?

விதூடகன்:—செம்பருத்திச் செடியினின்றும் (சேமந்தி) பூக்கள் கொய்யப்பட்டிருக்கின்றன.

அரசன்:—ஹா! வசந்தக! மலர்கள் எத்துணை அழகிய நிறங்களையுடையதா யிருக்கின்றன.

வாசவதத்தை:—(சிந்திக்கிறாள்) வசந்தகனது பெயர் கேட்டபோது மீண்டும் உச்சைனியிலிருப்பதுபோல் தோன்றுகின்றது.

அரசன்:—வசந்தக! இப்பாறையின்மேல் பத்மாவதி வருவதைப் பார்த்திருப்போம்.

விதூடகன்:—அங்ஙனமே. (உட்கார்ந்துவிட்டுக் குதித்தெழுந்து) சரத்கால வெயிலின் வெப்பத்தால் தரை சூடாயிருக்கிறது. இம்முல்லை மண்டபத்திற்சென்று உட்காருவோம்.

அரசன்:—ஆம் முன்னர் செல்க.

விதூடகன்:—அங்ஙனமே (இருவரும் சுற்றி நடந்தனர்).

பத்மாவதி:—பெரியார் வசந்தகர் யாவும் குழப்பத்தில் ஆக்குவர். இனி என்செய்வோம்?

சேடி:—இளவரசி! அடியேன் வண்டுகள் இருக்கும் கொடியைப் பிடித்து அசைத்து அரசனை வாராமற் தடுக்கின்றேன்.

பத்மாவதி:—அவ்வாறு செய்க.

(சேடி சொன்னவாறு செய்தனள்.)

விதூடகன்:—ஐயோ, ஐயோ, நில்லுங்கள் நில்லுங்கள்.

அரசன்:—என்ன?

விதூடகன்:—வேசி மக்கள் தேனீக்கள் என்னைத் தொந்தரவு செய்கின்றன.

அரசன்:—நண்பரே! அவ்வாறு கூறவேண்டாம். நாம் தேனீக்களை அச்சுறுத்தல் கூடாது. கவனிப்பாய்.

3. கோச்சகக்கலிப்பா.

மதுவுண்டு மதங்கொண்ட மதுகரத்தின் இனமெல்லாம்
மதனுசை யதனாலே மடவார்மெய் யுடன்சேரும்
பதவோசை யறிந்திடிலோ பரிதவிக்கும் நமைப்போல,
சதிபிரிந்த விரகத்தால் தவித்திடவே இடமாகும்.

அதனால் இங்கேயே இருப்போம்.

விதூடகன்:—அவ்வண்ணமேயாக.

(இருவரும் உட்கார்ந்தனர்.)

பத்மாவதி:—நன்று. பெருமான் உட்கார்ந்தனர்.

வாசவதத்தை:—(தனக்குள்) நல்லது. காதலர் உடம்பு முன்னிலைமையிலாயிற்று.

சேடி:—இளவரசி! நாம் சிறையிலிருக்கின்றோம். பெருமாட்டியின் கண்களினின்றும் கண்ணீர் வடிகின்றது.

வாசவதத்தை:—தேனீக்களின் ஆர்ப்பாட்டத்தால் அசைந்த ஆற்றுத் தருப்பைகளின் பூங்கொடி வீழ்ந்ததால் எனது கண்ணினின்றும் நீர் வீழ்ந்தது.

பத்மாவதி:—சரி.

விதூடகன்:—இங்கு யாரும் இல்லையே. இப்பிரமத வனத்தில் தங்களிடம் எனக்கொரு விஷயம் வினவவேண்டும்? கேட்கலாமா?

அரசன்:—மனம்போல்.

விதூடகன்:—யாரிடத்தில் அதிகக் காதல் சொல்லுங்கள்? முன்னைய வாசவதத்தையினிடமா? அல்லது இன்றைய பத்மாவதியினிடமா?

அரசன்:—ஏன் என்னைப் பெரிதான வெகுமான துன்பத்திற்குள்ளாக்குகின்றாய்?

பத்மாவதி:—தோழி! பெருமானை எத்தகை துன்பத்திற்குள்ளாக்கிவிட்டார்.

வாசவதத்தை:—(சிந்திக்கிறாள்) துர்ப்பாக்கியவதியான என்னையும்.

விதூடகன்:—கூசாமற் கூறுங்கள். ஒருவர் இறந்துவிட்டார். மற்றவள் இங்கு இல்லையே.

அரசன்:—தோழரே! நான் சொல்லமாட்டேன். நீர் ஓர் உளறுவாயன்.

பத்மாவதி:—இவ்வளவால் பெருமான் சொல்லிவிட்டார்.

விதூடகன்:—யான் ஆணையிடுகின்றேன். யாரிடமும் சொல்லேன். என் நாவை இதோ பூட்டிவிட்டேன்.

அரசன்:—தோழரே! நான் சொல்லமாட்டேன்.

பத்மாவதி:—அந்தோ! இவரது குற்றமே பார்க்கும் சுபாவம் இதனால் இன்னும் உள்ளம் அறியவில்லையோ.

விதூடகன்:—என்னிடம் சொல்லமாட்டீர்களா? சொல்லாமல் இக்கல்தரையினின்றும் ஓரடிகூட எடுத்துவைக்க இசையேன். தோழருக்கு நான் இதோ தடை வைத்திருக்கிறேன்.

(மேலாடையை எடுத்துச் சுருட்டி நீட்டி முன்னால் வைத்தனன்.)

அரசன்:—என்ன பலவந்தமா?

விதூடகன்:—ஆம் பலவந்தமே.

அரசன்:—ஆனால் யான் ஒன்று பரீக்ஷிக்கிறேன்.

விதூடகன்:—தோழர்! மன்னியுங்கள், மன்னியுங்கள். யான் சிநேகக் கட்டுப்பாட்டினால் ஆணையிடுவித்தேன். உண்மையைக் கூறவில்லையானால்,

அரசன்:—ஆனால் கேட்பாயாக.

4. கோச்சகக்கலிப்பா.

உடம்பினிலே அழகுடையாள் உயர்ந்தபெருங் குணமு
டையாள்,
மடம்பெருகும் இனிமையாள் மாட்சிமையாள் பதுமாவும்;
திடம்படவே தத்தையிடம் திணிப்புற்ற தெனதுமனம்
உடம்படினும் மீட்பதற்கு உறைத்ததால் இழுப்பதில்லை.

வாசவதத்தை:—(சிந்திக்கிறாள்) போதும், போதும். திருப்தி யடைந்தேன். இத்துன்பம் துய்த்ததின் கூலி கிடைத்தது. *கரந்துறைவதிலும் பல நன்மைகள் உள.

சேடி:—பெருமாட்டீ! மன்னர்க்குத் தயவில்லை.

பத்மாவதி:—சொல்லற்க, அங்ஙனம் சொல்லற்க. நாதன் தயவுடையவரே. இப்பொழுதும் அக்காள் வாசவதத்தையின் அருங்குணங்களை நினைக்கின்றனரன்றோ?

வாசவதத்தை:—பெருமாட்டீ! குலத்திற் கொத்தவாறுதான் கூறினீர்கள்.

அரசன்:—யான் கூறிவிட்டேன். இனி தாங்கள் கூறவேண்டும். நுமக்கு யாரிடத்தில் அதிகப் பற்று? முன்னைய வாசவதத்தையா? அல்லது இன்றைய பத்மாவதியா?

பத்மாவதி:—நாதனும் இப்பொழுது வசந்தகனாகிவிட்டார்.

விதூடகன்:—யான் ஏன் புலம்புகின்றேன்? இரு தேவியர்களிலும் எனக்கு ஒன்றுபோல் வெகுமானந்தான்.

அரசன்:—அடே! துஷ்டா! என்னைக்கொண்டு சொல்லச் செய்துவிட்டு நீயேன் மௌனமாயிருக்கிறாய்?

விதூடகன்:—என்னிடமும் பலவந்தமா?

அரசன்:—ஆம் பலவந்தமே.

விதூடகன்:—ஆனால் உங்களால் என்னிடமிருந்து கேட்கமுடியாது.

---

*கரந்து—மறைந்து. பதுமா—பத்மாவதி. தத்தை—வாசவதத்தை.

அரசன்:—அந்தணோத்தம! அருள் செய்க, அருள் செய்க. சொல்க, சொல்க மடிக்காமல்.

விதூடகன்:—தோழர் கேட்பீராக. வாசவதத்தை தேவியினிடம் எனக்கு அளவற்ற பிரியமுண்டு. பெருமாட்டி பத்மாவதி இளம் பருவத்தினள். கண்டால் நல்ல அழகுடையவள். கோபமோ அகந்தையோ இல்லை. நன்றாய்ப் பேசுவள். தயை மிக்கவள். மதுரமான உணவுகள் தயாரித்து என்னைத் தேடித் திரிவர். ஆரிய வசந்தகர் எங்கு சென்றார்? என்றிவ்வாறு.

வாசவதத்தை:—(சிந்திக்கிறாள்) ஆம், ஆம். வசந்தக, இப்பொழுது உரைத்ததை நினைவில் வைத்துக்கொள்.

அரசன்:—வசந்தக! சரி, சரி, இஃதெல்லாம் வாசவதத்தை தேவியினிடம் யான் சொல்வேன்.

விதூடகன்:—ஹா! கஷ்டம். வாசவதத்தையோ? அவர்கள் இப்பொழுது எங்கே? அன்னார் இறந்து எத்தனையோ நாட்களாகிவிட்டனவே.

அரசன்:—(வருத்தத்துடன்) சரி. வாசவதத்தை இறந்துவிட்டாள்.

5. கலிவிருத்தம்.

இத்தகை விகடம் இயம்பி யெனது
சித்தம் இளக்கிச் சிதறு படுத்தினை
நித்தம் உரைக்கும் நியதிபோல் மொழிகள்
தத்தம் முறையில் சனித்தன வன்றே.

(அழத்தொடங்கினர்.)

பத்மாவதி:—இன்பமான பேச்சின் சந்தர்ப்பத்தை இக்கொடியவன் தடுத்துவிட்டானே.

வாசவதத்தை:—(சிந்திக்கிறாள்) என்மனம் நல்ல நம்பிக்கையடைந்தது. இத்தகைய இன்பச் சொற்களை மறைவாய்க் கேட்டேன்.

விதூடகன்:—ஆறுங்கள், தோழரே, ஆறுங்கள்! ஊழின் வலியை யாரால் வெல்லவியலும்? இஃது இவ்வாறு வர வேண்டுமென்று விதியிருந்தது.

அரசன்:—தாங்கள் என் நிலையை அறியவில்லை.

6. ஆசிரிய விருத்தம்.

துன்பம் துடைக்கத் துணிவுகொண்டு
தொடுத்தேன் காதற் பயிரையுமே
முன்பு நிலைமை எண்ண வெண்ண
மூண்டது துன்பம் புதுப்புதிதாய்
அன்புக் கண்ணீர் அவிழ்த்து விட்டால்
அதனாற் கடனைக் கழித்திடுவர்
இன்ப உலகில் இதுபோன்ற
இயல்பால் புந்தி தெளியுமன்றே.

விதூடகன்:—தோழரின் முகம் கண்ணீரால் நனைந்துவிட்டது. யான் சென்று முகம் கழுவ நீர் கொண்டு வருகின்றேன். (சென்றனன்.)

பத்மாவதி:—பெருமாட்டீ! தலைவரது கண்கள் நீர்த்துளிகளால் நிரம்பியிருக்கின்றன. ஆதலால் நாம் சென்றுவிடுவோம்

வாசவதத்தை:—அவ்வண்ணமே. நீங்கள் இங்கு தங்குவீர்களா? துன்புற்றிருக்கும் தலைவரை விட்டுச் செல்லுதல் முறையன்று. நான் தனியாய்ச் செல்கிறேன்.

சேடி:—கூறியது உண்மை. இளவரசி அங்கு செல்லுங்கள்.

பத்மாவதி:—யான் அங்கு செல்லலாமா?

வாசவதத்தை:—ஆம், அவ்வாறே.

(போயினர்.)

---

6. காதற்பயிர்—பத்மாவதியின் காதல்.

*இறந்துபோன அன்பர்களிடத்துள்ள கடமை தீர்க்க உலகில் கண்ணீர் வார்த்து மனதை ஆற்றிக்கொள்வர். இதனால் கடமை செலுத்தப்படுகிறது.

விதூடகன்:—(தாமரை இலையில் தண்ணீர் கொண்டுவந்து) இதோ பெருமாட்டி பத்மாவதி.

பத்மாவதி:—பெரியீர் வசந்தக! இஃதென்னை?

விதூடகன்:—அது இதுவே! இது அதுதான்!

பத்மாவதி:—சொல்க, சொல்க பெருமான் சொல்க.

விதூடகன்:—காற்றடித்து ஆற்றுத் தருப்பையின் பூம்பொடிகள் வீழ்ந்து தோழரின் கண்கள் கலங்கிக் கண்ணீர் வந்துவிட்டது. முகம் கழுகத் தண்ணீர். இதோ! வாங்கிக் கொடுங்கள்.

பத்மாவதி:—(சிந்திக்கிறாள்) தயவுடையாரின் ஏவலாளரும் தயவுடையார்களே. (மருங்கிற் சென்று வெளிப்படையாக) பெருமானுக்கு வெற்றியுண்டாவதாக. முகம் கழுக இதோ தண்ணீர்.

அரசன்:—ஏ! பத்மாவதியோ! (இரகசியமாக விதூடகனிடம்) வசந்தகா இது என்னை?

விதூடகன்:—(செவியில்) இவ்வாறு கூறுவோம்.

அரசன்:—(மறைவாய்) வசந்தக! நன்று. (முகம் கழுவிவிட்டு) பத்மாவதி உட்காருக.

பத்மாவதி:—பெருமான் கூறுவதுபோல.

(உட்கார்ந்தனள்.)

அரசன்:—பத்மாவதி.

7. கோச்சகக்கலிப்பா.

இளவேனிற் காலத்தில் இயங்குகின்ற சந்திரன்போல்
பளபளக்கும் காயாம்பூப் பராகங்கள் பாங்குடனே
இளகிவரும் காற்றினால் எழும்பிவந்து கண்களிலே
களமொழியே வீழ்ந்ததால் கலுழ்ந்தவிழ்ந்த கண்ணீரும்.

(சிந்திக்கிறான்)

---

7. பராகம்—மகரந்தப்பொடி.

8. அறுசீராசிரிய விருத்தம்.

நல்லார் குலத்தின் நாயகமோ
நயக்கும் புதிய மணப்பெண்ணும்
சொல்லால் இதனின் மெய்யறிந்தால்
சுத்த மனத்தில் துயர்கொள்வாள்!
இல்லை யச்சம் சற்றேனும்
இம்மட மாதிற் கென்றாலும்
எல்லா மங்கை இயல்புகளும்
இளகும் பயத்தால் நடுங்குவதே.

விதூடகன்:—தோழரே! பிற்பகலில் மகதமன்னவன் தங்கள் முன்னிலையிற் பார்க்க வந்திருக்கும் சுற்றத்தார்களை உபசரிக்கவேண்டியதுண்டு. விருந்து உபசாரத்துடன் பெற்றால்தான் மகிழ்ச்சி. ஆதலால் தோழர் எழுந்தருளுங்கள்.

அரசன்:—ஆம் அவ்வண்ணமே மேலோர் கருத்து.

9. நற்குணமாய்ப் பொதுநோக்கும்
சற்காரம் உலகிலென்றும்
அற்புதமாய்ப் பலர்செய்வர்
அற்பமாகும் இஃதறிவோர்.

(எல்லோரும் போயினர்.)

[நான்காம் அங்கம் முற்றிற்று.]

---

9. உலகிற் பலரும் உபசாரம் செய்வர். என்றால் அதனையறிந்து ஆதரிப்போர் மிகச்சுருக்கம்.

ஐந்தாம் அங்கம்.

(பின்னர் பத்மினிகை வருகிறாள்.)

பத்மினிகை:—மதுகரிகை, மதுகரிகை விரைவில் வருக.

மதுகரிகை:—(வந்தபின்) தோழி! இதோ நான். வேண்டுவ தென்ன?

பத்மினிகை:—பத்மாவதி இளவரசிக்குத் தலைக்குத்தென்று அறியவில்லையோ.

மதுகரிகை:—ஐயோ!

பத்மினிகை:—நீ விரைவிற்சென்று பெருமாட்டி ஆவந்திகையினிடம் தெரிவிக்க. இளவரசிக்குத் தலைக்குத்தென்று மட்டும் கூறினுற் போதும். உடன் வருவர்.

மதுகரிகை:—தோழி! அவர் வந்தால் என்செய்வர்?

பத்மினிகை:—அவர் நல்ல நல்ல கதைகளைச் சொல்லி இளவரசியின் தலைக்குத்தைக் குறைத்து மகிழச்செய்வர்.

மதுகரிகை:—சரிதான். இளவரசிக்குப் பள்ளியுறக்கத்திற்கு எங்கே படுக்கை போட்டிருக்கிறீர்கள்?

பத்மினிகை:—*சமுத்திர இல்லத்தில் படுக்கை போட்டிருக்கிறது. நீ செல்க. அரசனிடம் சமாசாரம் தெரிவிக்க யான் பெரியார் வசந்தகனைத் தேடுகிறேன்.

மதுகரிகை:—அவ்வாறாகுக.

பத்மினிகை:—பெரியார் வசந்தகரை எங்கே பார்க்கலாம்.

(விதூடகன் வருகிறான்.)

விதூடகன்:—தேவி பிரிவாற்றாமையால் மனம் இடிந்த வத்ஸ மன்னவர்க்கு பத்மாவதியின் இன்பமயமான மங்கலப் பெருவிழாவின் திருமணத்தால் சுகநிலை எய்திற்று. சிற்

*சமுத்திர இல்லம்:—குளத்தின் நடுவில் இளைப்பாற அமைக்கும் வீடு.

றின்பப் பிரியனுன அன்னூர்க்கு மன்மத நோய்மிக்கிருக்கின் றது. (பத்மினியைப் பார்த்துவிட்டு) ஓ பத்மினிகே! பத்மினிகே! ஏன் இங்கு நிற்கின்றுய்?

பத்மினிகை:—பெருமானே. வசந்தக! பத்மாவதி இளவரசிக் குத் தலைக்குத்தென்று தாங்கள் அறியவில்லையோ?

விதூடகன்:—பெண்மணி! உண்மையாக நான் அறியவில்லை.

பத்மினிகை:—ஆனால் இதனை அரசனிடம் தெரிவியுங்கள். யான் நெற்றியில் பூசும் மருந்துகள் விரைவில் கொண்டு செல் கின்றேன்.

விதூடகன்—பெருமாட்டி பத்மாவதிக்கு எங்கே படுக்கை போட்டிருக்கிறார்கள்?

பத்மினிகை:—சமுத்திர இல்லத்தில் படுக்கை இட்டிருக்கின் றனர்.

விதூடகன்:—தாங்கள் செல்க. யான் சென்று அரசரிடம் தெரிவிக்கிறேன்.

(இருவரும் போயினர்.)

வருகை.

(பின்னர் அரசன் வருகிறான்.)

அரசன்:—

1. அறுசீராசிரிய விருத்தம்.

மெச்சும் நிலையில் உள்ளவளாம்
மேலாம் அவந்தி அரசனது
எச்சம் அவன்போல் சிறந்தாளே,
எரியால் இறந்தாள் இலவாணம்;
உச்ச மான கொடும்பனியால்
உழலும் பங்கயப் பொய்கைபோல்
நிச்சம் வருந்துவேன்; புதியவில்லாள்
நோய் மணந்தேன் என்றாலும்.

விதூடகன்:—(புகுந்து) தாங்கள் விரைவில் வருக! விரைவில் வருக!

அரசன்:—ஏன்?

விதூடகன்:—ஸ்ரீமதி பத்மாவதிக்குத் தலைநோய்.

அரசன்:—யார் கூறினர்.

விதூடகன்:—பத்மினிகை கூறினள்.

அரசன்:—ஆ கஷ்டம்!

2. அறுசீராசிரிய விருத்தம்.

கட்டழகும் குணங்களொடு கவினமைப்பும்
 கலந்ததொரு காந்தி யாளை
கிட்டியதால் துயர்சிறிது கேடடைந்து
 இப்போது கிடக்க லுற்றேன்
பட்டுவிட்டேன் பெருந்துன்பம் பளுவான
 இடிவாலே பரிந்து யானும்
கட்டமுன்போல் பதுமைக்கும் கடந்துவந்த
 வாறாகக் கருது கின்றேன்.

சரி பத்மாவதி இப்பொழுது எங்கிருக்கிறாள்?

விதூடகன்:—சமுத்திர இல்லத்தின்கண் படுக்கை போடப் பட்டிருக்கிறது.

அரசன்:—என்றால் வழிகாட்டுக.

விதூடகன்:—நண்பர்! இதன் வழி செல்க. இவ்வாறே செல்க.

(இருவரும் சுற்றி நடக்கின்றனர்.)

விதூடகன்:—இதோ சமுத்திர இல்லம். நண்பர் செல்க.

அரசன்:—முன்னுற் செல்க.

விதூடகன்:—அங்ஙனமே (உள்ளுக்குச் சென்று) ஐயோ! நில்லுங்கள்! நண்பரே! நில்லுங்கள்.

அரசன்:—என்ன?

விதூடகன்:—இதோ ஒரு பாம்பு தரையில் கிடந்து நெளிகின்றது. மங்கிய வெளிச்சத்தில் நெளிவதுதான் தெரிகின்றது.

---

2. பத்மாவதியின் நோயினுல் வேறு துன்பம் வரும் என ஐயுறவு கொள்கின்றேன். பத்மாவதியையும் தத்தையைப்போல் நேசிக்கின்றேன்.

அரசன்:—(உள்ளே சென்று பார்த்துச் சிரித்துக்கொண்டு) ஹா! மடையன் பாம்பைக் கண்டது.

3. நிலைமண்டில வாசிரியப்பா.

தோரண முகத்தில் தூக்கிய நன்மாலை
நேரா யற்று நிலத்திடை வீழ்ந்ததால்
பாம்பென மடையர பயந்து எண்ணினை
கங்குலிற் சிறிய காற்றடி பட்டு
அங்கு மிங்கு மசையுங் காலை
இங்குசற்று பாம்பி னியல்புகள் காட்டுமே.

விதூஷகன்:—(உற்றுப்பார்த்து) தோழர் கூறினது சரிதான். (உட்சென்று பார்த்து.)

ஸ்ரீமதி பத்மாவதி. இங்கு வந்துவிட்டுப் போயிருக்க வேண்டும்.

அரசன்:—தோழா! வந்திருக்கமாட்டாள்.

விதூஷகன்:—தோழர் எவ்வாறு அறிந்தீர்கள்?

அரசன்:—அறிவதற்கு என்ன இருக்கிறது. பார்.

4. ஆசிரிய விருத்தம்.

விரித்ததொரு படுக்கைதானும் மிடைந்துதாழ வில்லை
விளங்குகின்ற விரிப்புகளில் மேற்சுருக்கும் காணும்
உரித்தான மருந்துகளும் உற்றதலை நோய்க்கு
ஒழுங்காக இட்டவைகள் உதிர்ந்துதலை யணையில்
பெருத்தவழுக் கொன்றேனும் பெட்பாக இன்றே
*பிணியாள்முன் களைப்புத்தீர பேரணிகள் இலவே
எரித்தலுற்ற நோயாளி எழுந்துசெல்ல இயலார்.
இசைந்ததொரு படுக்கையிலே ஏற்றவாறு கிடந்தால்.

விதூஷகன்:—ஆனல் தோழர் இந்தப் படுக்கையில் ஸ்ரீமதி பத்மாவதியின் வரவிற்காக சிறிதுநேரம் காத்திருங்கள்.

---

3. கங்குல்—இரவு.
"பண்பொடு புணர்ந்த பதுமா பதியும்."
*நோயாளிக்கு நோய்வலி தெரியாமலிருக்க அவன்முன் அலங்காரம் செய்துவைப்பர்.

அரசன்:—அங்ஙனமே (உட்கார்ந்து) தோழா! எனக்குத் தூக்கம் வருகின்றது. ஒரு கதை சொல்க.

விதூடகன்:—நான் ஓர் கதை சொல்கின்றேன். தோழர் "இம்" என்று சொல்லிக் கேட்கவேண்டும்.

அரசன்:—ஓஹோ!

விதூடகன்:—உச்சைனி என்றொரு நகரமுண்டு. அங்கே மிக்க வனப்புள்ள நீராடும் துறைகள் பலவுள.

அரசன்:—என்ன? உச்சைனியா?

விதூடகன்:—இக்கதை ஏற்றதில்லையென்றால் வேறொன்று சொல்கிறேன்.

அரசன்:—விருப்பமில்லையென்றல்ல. ஆனால்

5. கோச்சகக் கலிப்பா.

பிரிகின்ற காலமதில் பிரியமுறும் சுற்றமதை
அரியகுல அவந்திபன்றன் அரும்புதல்வி யெண்ணியெண்ணி
பரிந்தவன்பால் கண்ணீரும் பலுகிப்பின் கண்ணுனியில்
சொரிந்தாளே; என்மார்பில் தோன்றுதிப்போ தென்
மனதில்.

6. நிலைமண்டில வாசிரியப்பா.

பதிவாய் வீணை படிக்கும் காலை
குறிப்பாய் யென்னைக் கூர்ந்து நோக்குவள்
மீட்டும் ஆணிகை விட்டது மோராள்
மீட்டல் செய்வாள் வீணாய் வானிலே.

---

5. அவந்திபன்றன் அரும்புதல்வி—வாசவதத்தை. பலுகி—வர்த்தித்து.

வாசவதத்தை பெண்பாலார்க்குரிய கலைகளில் வல்லவள், இசையும் யாழும் உதயணன்பால் கற்றுத்தேர்ந்தாள்.

மாலை தொடுத்தல், சிற்பவேலை முதலியன நன்கு கற்றவள். அதுமட்டுமன்று.

6. மீட்டும் ஆணி—வீணை மீட்டும் கோல். (Bow) "How often during lessons as she looked at me her hand from which the bow had slipped, would go on playing in the air!"
"நூலமை வீணைக் கோலமை கொளீஇ". (பெருங்கதை)

விதூடகன்:—ஆம். வேறு சொல்லுகிறேன். பிரம்மதத்தம் என்றொரு நகரம். ஆங்கு காம்பில்லியம் என்றொரு மன்னவன்.

அரசன்:—என்னே, என்னே?

விதூடகன்:—(மீண்டும் அவ்வாறே கூறுகிறான்).

அரசன்:—மடையா! அரசன் பிரம்மதத்தன். நகரம் காம்பில்லியம் என்று சொல்வாய்.

விதூடகன்:—ஓகோ! பிரம்மதத்தன் அரசனும் நாடு காம்பில்லியமுமா?

அரசன்:—ஆம்; அப்படித்தான்.

விதூடகன்:—என்றால் தோழர் சிறிது பொறுத்துக்கொள்ளுங்கள். யான் இது மனப்பாடம்செய்து திடப்படுத்திக் கொள்கிறேன். அரசன் பிரம்மதத்தன், நகரம் காம்பில்லியம். (இவ்வாறு பன்முறை உருவிட்டு) இனிக் கேளுங்கள். என்ன உறங்கிவிட்டீர்களா? நல்ல குளிர். எனது போர்வை எடுத்து வருகிறேன்.

(சென்றனன்.)

(வாசவதத்தையும் சேடியும் வருகின்றனர்.)

சேடி:—பெருமாட்டி! இவ்வழியே, இவ்வழியே. இளவரசிக்குத் தலைவலி மிகுதியாயிருக்கின்றது.

வாசவதத்தை:—கஷ்டம்தான் எங்கே படுக்கைபோட்டிருக்கிறீர்கள்?

சேடி:—சமுத்திர இல்லத்தில் போடப்பட்டிருக்கிறது.

வாசவதத்தை:—என்றால் முன்னே செல்க. (இருவரும் சுற்றி நடந்தனர்).

சேடி:—இதோ! சமுத்திர இல்லம். யான் சென்று நெற்றியில் பூசும் மருந்து கொண்டுவருகிறேன்.

(சென்றனள்.)

வாசவதத்தை:—தெய்வங்கட்கு என்னிடம் சிறிதும் இரக்கமில்லை. பிரிவஞ்சித் துன்புறும் நாதனுக்கு ஆற்றும் இடமான இப்பத்மாவதிக்கு நோயாயிற்றே. சரி உள்ளே செல்வோம்.

(சென்று பார்த்து.)

ஏவலாளர்களின் காவல்தான் என்னே? பத்மாவதி நோயுற்றிருக்கும்பொழுது உதவிக்காக ஓர் விளக்கைமட்டும் வைத்துவிட்டு எல்லோரும் போய்விட்டார்களே. (அண்மையிற் சென்று நோக்கியபின்.)

இவள் உறக்கம்போலும். இங்கே உட்காருவோம். (உட்கார்ந்து) விலகியிருந்தால் நட்பில்லையென்று நினைப்பார்களே. ஆகையால், படுக்கையின்மீது இருப்போம். (இருந்தபின்) இவளோடு ஒருமிக்க இருந்தபின் இன்று எனக்கு என்ன ஓர் விசேடமான குளிர்ச்சி தோன்றுகிறது. நன்மைதான். (செவி சாயத்து) மூச்சுமட்டாகவும், தடையில்லாமலும், சுகமாகவும் இருக்கின்றது தலைக்குத்துச் சிறிது குறைந்திருக்கவேண்டும். படுக்கையின் பாதி இடம் காலியாயிருப்பதால் நான் அவளோடு சேர்ந்து படுக்கவேண்டுமென்று விரும்பிச் செய்ததாயிருக்கலாம். ஆதலால், படுத்துக்கொள்ளுகிறேன். (படுத்தனள்.)

அரசன்:—(கனவில் புலம்புகின்றனன்) ஹா! வாசவதத்தாய்!

வாசவதத்தை:—(திடீரென எழுந்து) ஹா நாதனே! பத்மாவதியல்ல. என்னைப் பார்த்துவிட்டார்களோ! ஆனால், பெருமான் யௌகந்தராயணனது உயர்ந்த சத்தியம் வீணாகும்.

அரசன்:—(சொப்பனத்தில் மீண்டும்) என் அவந்தி அரசன் மகளே!

"காரணம் பயிற்றினும் காந்தண் முகிழ்விரல்
யாழ்க்கோல் கூறியது காண்க." (பெருங்கதை)
"காட்சிக்கொத்த கள்வனுதலின்
மேற்படு நோக்கமொ டிருவருமெய்தி"
"கைவைத்தனளால் கனங்குழை யாழென்." (பெருங்கதை)

வாசவதத்தை:—பாக்கியம்தான். காதலன் கனவில் புலம்பியது தான் (சுற்றிலும் பார்த்து) இங்கே யாருமில்லை; சிறிது நேரம் நின்று கண்ணும், உள்ளமும் குளிர்ப்பிப்போம்.

அரசன்:—(மீண்டும் கனவில்) ஹா! கண்ணாட்டீ! அருமை மாணவி! அழைக்கின்றேன் கேள்.

வாசவதத்தை:—நான் அழைத்தது கேட்கிறேன் பிராணநாதா! நான் அழைத்ததுக் கேட்கிறேன்.

அரசன்:—(சொப்பனத்தில்) தேவீ! கோபங்கொண்டாயோ?

வாசவதத்தை:—அன்று; அன்று. துன்புற்றிருக்கிறேன்.

அரசன்:—(சொப்பனத்தில்) கோபிக்கவில்லையானால் ஏன் ஆபரணங்கள் அணியவில்லை?

வாசவதத்தை:— இதைவிடக் கூடுதலாக என்ன வேண்டும்?

அரசன்:—(சொப்பனத்தில்) *விரசிகையை எண்ணுகிறாயோ?

வாசவதத்தை:— (கோபத்துடன்) ஆ! போங்கள். இங்கும் விரசிகையா?

அரசன்:—(சொப்பனத்தில்) ஆனால் விரசிகையின் பொருட்டு நான் உன்னை மகிழச்செய்கின்றேன்.

(கைகளை நீட்டுகின்றான்.)

வாசவதத்தை:—யான் இங்கே அதிகநேரம் நின்றுவிட்டேன். யாரேனும் பார்த்துவிடுவார்கள். ஆதலால் போய்விடுவோம். அல்லது படுக்கையினின்றும் விலகிக் கிடக்கின்ற காதலனது கைகளைத் தூக்கி நேராக வைத்துவிட்டுச் செல்வோம்.

(சொன்னவாறு செய்துபோயினள்.)

அரசன்:—(திடீரென்று விழித்தெழுந்து) வாசவதத்தாய்! நில் நில். ஐயோ கஷ்டம்!

***விரசிகை:—வாசவதத்தைக்கு சக்களத்திபோலுள்ளவள். ஓர் இராச ரிஷியின் மகள். தவஞ்செய்ய வந்த அவருடன் இவளும் வந்து ஓர் வனத்திலிருக்கையில் இளமைப் பருவத்தில் உதயணனால் மாலை சூட்டப்பட்டு பின்பு அவனால் மணம்செய்துகொள்ளப்பட்டவள். கற்புடையாள். (பெருங்கதை.)**

7. நேரிசை வெண்பா.

ஆத்திரம் கொண்டு அமைவின்றி ஓடிவந்தேன்
காத்திரத்தில் தாக்கக் கதநினிலை—மாத்திரையில்
இந்த மனோரதம் ஏற்றவுண்மை தானெனவும்
அந்தம் புகல அரிது.

விதூடகன்:—(நுழைந்தபின்) தோழர் விழித்துவிட்டீர்களா?

அரசன்:—தோழா! ஓர் சந்தோஷச் செய்தி சொல்கிறேன். வாசவதத்தை உயிருடன் இருக்கிருள்.

விதூடகன்:—அந்தோ! வாசவதத்தையா? வாசவதத்தை யெங்கே? அத்தேவி இறந்து எவ்வளவு நாட்களாகி விட்டன.

அரசன்:—நண்பா! இல்லை, இல்லை.

8. கலி விருத்தம்.

படுக்கை மீதியான் படுத்தயர் போதினில்
அடுத்து வந்தெனை அசைத்தவ ளுணர்த்தியே
சடுதி சென்றனள்; தகித்தனள் தீயதில்
கெடுத்து ருமண்ணுவன் கிளர்ந்தனன் நண்பகேள்.

விதூடகன்:—இது நடைபெறக் கூடாததல்லவே. நீராடும் துறையென்று கேட்டதனுல் தாங்கள் அரசியை எண்ணிக் கொண்டு படுத்திருந்ததால் கனவில் கண்டீர்கள்.

அரசன்:—

9. கலி விருத்தம்.

வீண்கன வென்பது விளக்க மாயிடில்
மாண்பயன், எழாது வதிந்து கிடத்தலே;
காண்பது சித்தக் கலக்க மாகிலோ
பூண்பதாம் எமக்கது பொருந்துக நெடுநாள்.

---

8. தகித்தனள்—எரிந்தனள்.

"If this be a dream, then it were bliss not to have awakened, and if it be an illusion, would that it lasted for ever!" அது கனவாளுல் எழுந்திருக்காமல் கண்டுகொண்டிருத்தலே நன்று. சித்தப்பிரமையாளுல் அது எமக்கு எப்போதுமிருக்கட்டுமென்று இன்பத்தால் கூறினன்.

விதூடகன்:—பெருமானே மக்கள் ஏளனம் செய்யலாகாது. இந்நகரில் அவந்தி சுந்தரி என்னும் ஓர் இசக்கி உண்டு. நண்பர் கண்டது அதாகத்தானிருக்கலாம்.

அரசன்:—இல்லை, இல்லை.

10. நேரிசை வெண்பா.

கனவதனின் அந்தமதில் கண்டேனே கற்பில்
தினையளவு குன்றாத செல்வி—நனைகமழ்
பங்கய வானனமும் பாரம்நீள் காரளகம்
தூங்கக்கண் மையிழந்த தோற்று.

11. நேரிசை யாசிரியப்பா.

இடருறு மனத்தால் இயலுமென் கண்மணி
பிடித்து வழுத்திப் பிரியமாய்க் கரத்தில்
கனவில் தொடினும் காணலாம்
புளகம் பெரிதாய்ப் போகா துளதே.

விதூடகன்:—வீணான கவலையொன்றும் வேண்டாம், வேண்டாம் வாருங்கள்! அரண்மனைக்குட் செல்வோம்.

மெய்காப்பாளன்:—(வந்து) பெருமானுக்கு வெற்றியுண்டாவதாக! எங்கள் தருசக மன்னன் பெருமானிடம் கூறுகிறார். அமைச்சன் உருமண்ணுவான் ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு ஆருணியுடன் போராட வந்திருக்கிறான். எனது கரி, பரி, தேர், காலாட் படைகளும் தயாராயிருக்கின்றன. ஆதலால் போருக்குப் புறப்படுவீர்களாக! அதுமட்டுமன்று.

---

10. தோற்று—தோன்றும். ஆனனம்—முகம்.
பாரம் நீள் காரளகம்—நீண்டு பாரமுடைய கரிய கூந்தல்.
11. புளகம்—மயிர் சிலிர்க்கை.
வாசவதத்தைபாலுள்ள காதலினால் இராச காரியத்தையும் மறந்துவிட்டான்.

நிலைமண்டில வாசிரியப்பா.

12. உட்பகை வளர்த்தோம ஒன்னார் தமக்குள்
நட்புப் பெருகி நலமாய் வாழ்வர்
நின்மீ தன்புடை நின்மலப் பௌரர்
கன்மம் யானும் கணிசமாய்ச் செய்தேன்;
யாத்திரைக் குரியன யாவும் முறைபோல்
ஆத்திர முடைய அரிகளும் பின்னால்
வந்து வெதிர்க்கா வழிகளும் அமைத்தேன்;
பகைவர் கூட்டம் பாங்குட னழிக்கும்
வகைகள் எல்லாம் வரிசையாய்ச் செய்தேன்;
கங்கை யாற்றைக் கடந்தனர் படைகளும்
சங்கை வேண்டாம் சடுதியில் வத்தவ
நாடும் உனக்கு நயமாய் வந்ததே.

அரசன்:—(எழுந்தபின்) அங்ஙனமே! இதோ யான்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

13. ஒல்லை சென்று உதைப்பேன் *ஆருணி
தொல்லை பலவும் தொடுத்த அவனை
நல்ல பாடம் நான்கொடுப் பேனே
கரிக ளோடும் கடும்போர் செய்வேன்
பரிகளை யெல்லாம் பாங்குட னெதிர்ப்பேன்
சரங்கள் அனந்தம் சாகரம் போன்று
கரங்களி னின்றும் கைவிடும் காலை
சிரங்கள் தெறித்துச் சிதறும் படைகளே.

(எல்லோரும் போயினர்.)

[ஐந்தாமங்கம் முற்றிற்று.]

---

12. ஒன்னார்—பகைவர். வத்தவநாடு—வத்ஸநாடு. அரிகள்—பகைவர்.

13. *ஆருணி—வத்ஸமன்னனது நாட்டைப் பிடித்த பகைவன் பாஞ்சால நாட்டவன். மிக்க பராக்கிரமமுடையவன். உதயணன் சிறைப்பட்டபோது பெரும் படையுடன் கோசாம்பியைப் பிடித்தவன்.

"அடல் வேற்றானை யாருணி யரசர்க்கு
ஞாலத் தினின்னுயிர் வாழ்வோர் நாம்பட்
காலம் பார்க்கும் காலன் போல
வெல்போ ருதயணன் வெஃகுநனையாக." (பெருங்கதை.)

இவனை உதயணன் கொன்றதாய்க் கூறப்படுகின்றது.

ஆறும் அங்கம்.

(பின் மெய்காப்பாளன் வருகின்றான்.)

மெய்காப்பாளன்:— யாரங்கே இரத்தின தோரணவாயிலி லிருப்பது?

வாயிற்காப்பவள்:— (வந்து) பெருமானே! நான்தான் *விஜயை என்னவேண்டும்?

மெய்காப்பாளன்:— அம்மணி! தெரிவியுங்கள். வத்ஸநாடு கிடைக்கப் பெற்றதினால் பாக்கியம் மிக்க உதயண மன்னவனிடம் தெரிவியுங்கள். இதோ மகாசேனனிடமிருந்து வந்த இரைப்பிய குலத்திற் பிறந்த மெய்காப்பாளனும், அங்காரவதி அரசி அனுப்பிய பெருமாட்டி †வசுந்தரை யெனும், வாசவதத்தையின் செவிலித்தாயும் கோபுரவாயிலில் வந்து நிற்கின்றனர் என்று.

வாயிற்காப்பவள்:— பெருமானே! அசந்தர்ப்பம். யாம் இப்போது அரசர் திருமுன் செல்லலாகாது.

மெய்காப்பாளன்:— என்ன தடை?

வாயிற்காப்பவள்:— பெருமானே! கேளுங்கள். இன்றைக்கு மன்னர்பிரான் பள்ளியுறக்க மாளிகையில் எழுந்தருளி யிருக்கும்போது வெளியில் ஓர் வீணை வாசிப்புக் கேட்டது. உடன் செவிசாய்த்து கோடபதியின் ஒலிபோல் இருக்கின்றதே என்றார்.

---

*விஜயை—இண்டாவது தா நடிகை. பாஸனது இரு நாடகங்களில் வருகிறாள்.

†வசுந்தரை, வசுந்தரியென பெருங்கதையில் கூறுவர்; கோசல நாட்டரசன் தேவி; மானனீகையென்று வேறுபெயர்கொண்ட வாசவதத்தையின் தாய்.

"தேவியர்க் கெல்லாம் தேவியாகிய
திருத்தகுகற்பில் தீங்குயிற்கிளவி
வரிகுறற் கூந்தல் வசுந்தரி தன்மகள்".
"கோசலத்தரசன் மாபெருந்தேவி
மாசில் கற்பின் வசுந்தரி யென்னும்
தேனிமிர் கோதை சேடியேன் யான்". (பெருங்கதை.)

மெய்காப்பாளன்:— பிறகு.

வாயிற்காப்பவள்:— பின் அவனோடு வினவினர் இவ்வீணை எங்கிருந்து கிடைத்ததென்று? எனக்கு நருமதையின் கரையில் ஓர் கொடிக் குடிசையிலிருந்து கிடைத்தது. அவசியமாளுல் எடுத்துக்கொள்ளுங்கள் என்றான். மன்னர் பிரான் அதனை மடியில் எடுத்து வைத்தபின் மூர்ச்சை யானார். உணர்ச்சி வந்தபின் திருமுகத்தில் கண்ணீர் வடித்துக்கொண்டு அருளினர். "கோடபதி உன்னைக் காணக்கிடைத்தது. அவளைக் காணக்கிடைக்கவில்லையே" பெருமானே! ஆதலால் வேளை நன்றல்ல. யான் எவ்வாறு உணர்த்துவேன்.

மெய்காப்பாளன்:— நீ சென்று தெரிவி. இதுவும் அதை ஒட்டிய காரியந்தான்.

வாயிற்காப்பவள்:— பெருமானே! யான்சென்று தெரிவிக்கின்றேன். இதோ வேந்தர்பிரான் சயனமாளிகையினின் றும் இறங்குகிறார். அங்கு வைத்துத் தெரிவிக்கின்றேன்.

மெய்காப்பாளன்:— அவ்வாறே.

(இருவரும் போயினர்.)

விஷ்கம்பம்.

(பின்னர் அரசனும் விதூடகனும் வருகின்றனர்.)

1. நேரிசை யாசிரியப்பா.

இன்புறும் சுருதியால் இசைந்த ஒலியோய்!
பொற்புடை யாளின் பொலிவுறு மார்பிலும்
மடியிலு மாகி மருவிய பின்னர்
அடியிலு முடியிலும் அமைந்து பறவை
அசுத்தப் படுத்தி அழுக்குறக்
காடு வாழ்க்கை கழித்தது கஷ்டமே.

விஷ்கம்பம்—பிரவேசகம் எனினும் ஒக்கும். முன் பார்க்க.

அன்றியும், *கோடபதி! உனக்குச் சிறிதும் நேசமில்லை. நீ நினைக்கவில்லையே. அந்த ஏழையின்,

2. நிலைமண்டில ஆசிரியப்பா.

அரையிற் சேர்த்து அமைவாய் வைப்பதும்
விரைவாய்ப் †பாரிசம் வீக்கமாய்ச் சேர்ப்பதும்
களைத்த போது கனத்த தனமிடை
அளவ ளாவி அதிகமாய்த் தழுவலும்
பிரிதல் நேர்ந்தால் பெரிதும் புலம்பலும்
பரிவுடன் மீட்டல் பண்பாய்ச் செய்தால்
பிரிய மான பேச்சுகள் சொல்வதும்
மறந்தனை நீயும் மாண்புறும் யாழே!

விதூஷகன்:— அரசே! இன்னும் பெரிதும் வருந்த வேண்டாம்.

அரசன்:—தோழா! என்செய்வேன்.

3. கோச்சகக்கலிப்பா.

பலநாளும் தூக்கமொடு பயிலுகின்றான் காமனென்
மேல்
பலமாக யாழ்தானும் பரிந்துணர்த்தி விட்டதுவே
தலையான அன்புடையாள் தகுகோட பதிமீது
குலமாதைக் காணேனே குணமுடையாய்! என்
செய்வேன்.

வசந்தக! விரைவில் சிற்பிகளைக் கொண்டு கோடபதியைப் புதுப்பித்துக் கொண்டுவருக.

---

*கோடபதி—கோஷவதி யெனவும் வழங்குவர். யாழ்வகையில் பேரியாழின் பாற்படும்; பிரமசுந்தரரென்னும் முனிவரால் உதயணனுக்கு யாழ் வித்தையுடன் கொடுக்கப்பட்டது; தெய்வத்தன்மை வாய்ந்தது. இதனைக் கற்பிக்கும் பொழுதுதான் வாசவதத்தையின் அன்பைப்பெற்றான்.

"கூட்டமை வனப்பில் கோடபதிக்குரல்
கேட்டனன் யானும் கேண்மதி நீயும்
விரைந்தனை சென்றுநம் மரும்பெறல் பேரியாழ்"
(பெருங்கதை)

†பாரிசம்—உடற்பக்கம்.

விதூஷகன்:— கட்டளைப்படியே. (யாழை எடுத்துச் சென்றான்).

காவற்பெண்:— அரசே! வெற்றியுண்டாவதாக. இதோ மகாசேனனது மருங்கினின்றும் வந்த இரைப்பிய மாபிலுதித்த மெய்காப்பாளனும், அங்காரவதி அரசி அனுப்பிய பெருமாட்டி வசுந்தரை யென்னும் வாசவதத்தையின் வளர்ப்புத்தாயும் கோபுர வாயிலில் நிற்கின்றனர்.

அரசன்:— என்றால் பத்மாவதியை அழையுங்கள்.

காவற்பெண்:— பெருமானின் ஆணைப்படியே.

(சென்றனள்).

அரசன்:— இவ்வளவு விரைவில் இந்தச் செய்தி மகாசேனன் அறிந்துவிட்டானு?
(பிறகு காவற்பெண்ணும் பத்மாவதியும் வருகின்றனர்).

காவற்பெண்:— இளவரசி! இவ்வழியே, இவ்வழியே.

பத்மாவதி:— பெருமானுக்கு வெற்றியுண்டாவதாக.

அரசன்:— பத்மாவதி அறியவில்லையா? *மகாசேனனது மருங்கினின்றும் வந்த இரைப்பிய மாபிலுதித்த மெய்காப்பாளனும், அங்காரவதி அரசியனுப்பிய பெருமாட்டி வசுந்தரையெனும் வாசவதத்தையின் வளர்ப்புத்தாயும் கோபுரவாயிலில் நிற்கின்றனர் என்று.

பத்மாவதி:— பெருமானே! யான் மகிழ்கின்றேன். உறவினரது நலனுறும் வார்த்தைகள் கேட்கலாமே.

---

*மகாசேனன்—பிரச்சோதனன் எனவும் அழைப்பர். தத்தையின் தந்தை. ஓர் சக்கிரவர்த்தி. நாடு அவந்தி. நகர் உச்சைனி. உதயணனை வஞ்சத்தாற்பிடித்துச் சிறையில் வைத்தவன்.
"திருச்சேரலத்துப் பிரச்சோதனன் மகள்". (பெருங்கதை)

அரசன்:— நமக்கேற்ற மொழிகள் தான் இப்போது உரைத்தீது. வாசவதத்தையின் உற்றார் எனக்கும் உற்றார் என்றது. பத்மாவதி உட்காரு. ஏன் உட்காரவில்லை?

பத்மாவதி:— பெருமான் என்னோடு உட்கார்ந்துகொண்டா அவர்களைப் பார்ப்பது?

அரசன்:— அதில் என்ன பிழை?

பத்மாவதி:— பெருமானின் வேறொருமனைவியென்று மனம் கூசுகிறது.

அரசன்:— மனைவியைப் பார்க்க உரிமையுள்ளவரிடத்துக் காட்டாதிருந்தால் பல ஏதங்களும் வரலாம். ஆதலால் உட்காரு.

பத்மாவதி:— பெருமானின் ஆணைப்படியே! (இருந்தபின்) பெருமானே தந்தையும், தாயும் யாது கூறுவரென்று என்மனம் கவலைப்படுகின்றது.

அரசன்:— பத்மாவதி! உண்மைதான்.

4. நிலைமண்டில ஆசிரியப்பா.

அச்சமோ உளத்தில் ஐயமும் கொண்டேன்
எச்சொல் லுரைப்பர் என்னோ டென்று
களவு கொண்டேன் காவலன் மகளை
பளகில் காத்து பாலனம் செய்திலேன்
நிலையிலா ஊழினால் *நெகிழ்ந்தன குணங்களும்
உலைவுறு துன்பம் ஒருங்கே செய்து
அளவிலா வெறுப்பை யளித்த மைந்தன்
தளரும் நிலைபோல் தந்தைக் காணேன்
உளத்தில் அச்சமும் உடையே னின்னே.

பத்மாவதி:— தக்க காலத்தில் எதுவும் காப்பாற்றலாம். காலம்பிழைத்தால் காப்பாற்றவியலாது.

காவற்பெண்:— இதோ மெய்காப்பாளனும் வளர்ப்புத்தாயும் வாயிலில் நிற்கிறார்கள்.

---

*நெகிழ்ந்தன—கழன்றன.

அரசன்:— விரைவில் அழைத்துவா.

காவற்பெண்:— கட்டளைப்படியே. (போகுள்.)

(பிறகு மெய்காப்பாளனும் வளர்ப்புத்தாயும் காவற் பெண்ணும் வருகின்றனர்.)

மெய்காப்பாளன்:— (சிந்திக்கிருன்).

5. நிலைமண்டில ஆசிரியப்பா.

நாட்டை மீண்டும் *நமது உறவினர்
ஈட்டிக் கொண்டதில் இணையிலா மகிழ்ச்சி
மன்னன் மகளின் மரணம் உன்னி
என்மனம் வெந்து எரியுதே மீண்டும்
என்னே விதியே, இசைப்ப திலதே
தன்னே ரில்லா தலைவியின் நலமும்
மன்னிய நாடு மாற்றலர் பெறுதும்
துன்னி யிருந்தால் துயரமும் இலையே.

காவற்பெண்:— இதோ மன்னர்பிரான். பெருமான்! மருங்கு செல்க.

மெய்காப்பாளன்:— (அண்மையிற் சென்று) பெருமானுக்கு வெற்றியுண்டாவதாக.

செவிலித்தாய்:— அரசே! வெற்றியுண்டாவதாக.

அரசன்:— (மதிப்புடன்) பெரும!

6. நிலைமண்டில ஆசிரியப்பா.

உலகில் அரச குலத்தவர்க் கெல்லாம்
உலைவும் ஆக்கமும் ஒன்றச் செய்யும்
அலகில் ஆற்றல் அமையப் பெற்றவர்,
என்னிடம் உறவு கொள்ள விழைந்தவர்,
மன்னர் நலமோ? மகாசேனன் தானே.

---

*நமது உறவினர் ஈட்டி—சம்பந்தியான உதயணன் நாட்டைப் பெற்றது.

ஏ தேவியே! பகைவன்பெற்ற நாடு மீண்டு ஈட்டியது போல் வாசவதத்தை தேவியும் நலமாயிருந்தால் மகாசேன உதயணர்களை திருப்திப்படுத்திவிட்டாய் என்பது கருத்து.

மெய்காப்பாளன்:— ஆம்! மகாசேனற்கு நலமே. ஈண்டும் யாவர்க்கும் நலம் தானேவென்று அவர்கள் வினவுகின்றனர்.

அரசன்:— (எழுந்து) மகாசேன மன்னனது கட்டளை யாது?

மெய்காப்பாளன்:— வைதேகி மகற்கு இது தகுதிதான். மகாசேன மன்னனது கட்டளையைப் பெருமான் உட்கார்ந்துகொண்டு கேட்டாற் போதும்.

அரசன்:— மகாசேனமன்னவன் ஆணைப்படியே. (உட்கார்ந்தனன்.)

மெய்காப்பாளன்:— பகைவர் கைப்பற்றிய நாட்டை புண்ணியத்தால் மீண்டு எடுத்தீர்களன்றோ?

7. நேரிசை வெண்பா.

ஆற்றல் குறைந்தவரும் அச்சம் உளவோரும்
மாற்றற் கரிய மடியரும்—*ஆற்றூர்
உயர்ச்சி யளிக்கும் உலகாளும் தானம்
முயற்சி யுடையார்க்கே முற்று.

அரசன்:— இஃதெல்லாம் மகாசேனனது பெருமைதான்.

8. ஆசிரிய விருத்தம்.

என்னை வென்று †முன்னாலே
இன்பம் தந்து மைந்தர்போல்
கின்னம் இன்றிக் காத்தானே
கீர்த்தி பெற்ற மாமகனை
மன்னன் அறியா மற்கவர்ந்தேன்
மாட்சி யாகக் காத்தேனில்
வன்னி பட்டு மடிந்தாளின்
வருத்தம் கேட்டும் என்மீதில்

---

*ஆற்றூர்—அடைந்தனுபவியார். முற்றும்—முழுதும்.
†முன்னாலே—யானைவேட்டையில், வென்று பிடித்தேகினர்.
கின்னம்—துன்பம். வன்னி—எரி.
"மறத்தகை மாரவன் மாய யானையில்
சிறைப்படு பொழுதிற் சென்றவற் பெயர்க்க." (பெருங்கதை)

(தொடர்ச்சி.)

நிலைமண்டில ஆசிரியப்பா.

முன்னை யன்பு முழுது முண்டு
துன்னும் சிற்றம் துமியு மில்லை.
வத்தவ நாட்டை மீட்டுக் கொண்டதும்
சத்தியா லாள வைத்ததும் பார்க்கில்
புத்தியில் சிறந்த புனித னேதுவே.

மெய்காப்பாளன்:— இதுதான் மகாசேனனது கட்டளை. தேவியின் கட்டளையை வசுந்தரை அன்னை தெரிவிப்பர்.

அரசன்:— ஹா! அன்னையே!

9. கலிவிருத்தம்.

*எட்டி ரண்டுடை ஏந்திழை மார்களில்
பட்டம் மேம்படு பண்புறு தேவியர்
பட்டண மக்களின் பாங்குறு தெய்வமாம்
கட்டி யென்னது கண்மணி போனதால்.

(தொடர்ச்சி.)

வெந்த மனமுடைத் தேவியர்
வீறழி ந்தின்னுயிர் தாங்கினோர்
அந்த நற்குண மாதரார்
அமைந்த இன்னல மாவளோ?

செவிலித்தாய்:— அரசிக்கு நோய் ஒன்றுமில்லை. அவர்கள் பெருமானுக்கும், ஏனையோர்க்கும் நலம் வினவுகின்றனர்.

அரசன்:— எல்லோரதும் நலமோ? அன்னாய்! இங்கு இவ்வாறுதான் நலம்.

செவிலித்தாய்:— அரசே! மிகுதியாய் வருந்தவேண்டாம்.

மெய்காப்பாளன்:— மன்னவ! வருந்தவேண்டாம். பெருமானுக்கு இவ்வளவு காதல் அவர்களிடம் இருப்பதினால் அந்த மகாசேனன் மகள் மடிந்தாலும் மடிந்தவளல்லள். அல்லது,

---

*எட்டிரண்டுடை ஏந்திழைமார்களில்—பதினாறு அந்தப்புரப் பெண்களில் பல மனைவியர் உளர்.

10. யார்தான் எவர்க்குத் துணையாவர்?
   யாக்கை பிரியும் பொழுதினிலே
நீர்தாம் முகரும் கிணற்றின்கண்
   நீளக் கயிறும் அறுந்ததுவே
ஆர்தாம் புரப்பர் அக்குடத்தை
   அடவி யழியும், அழிகாலம்,
ஆர்ந்து முளைக்கும் அடுத்தகாலம்
   ஆகும் உலகின் அமைப்பிதுவே.

அரசன்:— பெரியீர்! அங்ஙனமன்று.

11. மன்னவன் மகாசேனன் மகளோ, தேவியர்
   முன்னணி எமதன்பு மன்னிய மாணவி
எத்தனை பிறவி எடுக்கினும் அந்தோ
   எந்தனால் மறக்க இயலுமோ அவளே.

சேவிலித்தாய்:— அரசி அருளிச் செய்தனர். வாசவதத்தை இறந்து விட்டாளன்றோ? எனக்கும் மகாசேனற்கும் *கோபால, பாலகர்கள் எவ்வாறோ அவ்வாறு தான் பெருமானும். முன்னரே தங்களைத்தான் மாப்பிள்ளையாகக் கருதினோம். அதனால்தான் உச்சைனியில் வரவழைத்ததும்,

---

10. புரப்பர்—காப்பாற்றுவர்.

"Who can save a person in the hour of his death? Should the rope give way, who can save the pitcher? There is one law for men and trees. They spring in the proper season and in the proper season are they hewed down." (Devadhar, M.A.)

11. அவளே—அவளை. எமதன்பு மன்னிய மாணவி—எனது அன்புபொருந்திய மாணாக்கி.

"முன்னுற நின்று முதறி செவிலிநும்
மகண்மா ணாக்கி வணங்கி நும்மென". (பெருங்கதை)

தேவியர் முன்னணி—பட்டத்தேவி உதயணனது நான்கு மனைவியரினும் முதன்மையானவள்.

*கோபால பாலகர்—மகாசேனனது புதல்வர்கள். பிரச்சோதனன் பட்டத்தேவியருள் ஒருத்தியின் புதல்வர்கள். வாசவதத்தையின் சகோதரர்களல்லர்.

வீணைப்பயிற்சியெனும் போலிக் காரணத்தால் அக்கினி சாட்சியின்றியளித்தோம். பெருமான் *சபலத்தன்மை யால் திருமண மங்களம் நடைபெறச் செய்யாமல் போய் விட்டீர்கள். உடன் வாசவதத்தையினுடையவும், பெரு மானுடையவும் உருவங்களைச் சித்திரப் பலகையில் வரைந்து மணவினை நிகழ்த்தினோம். அப்படத்தை இங்கு கொண்டு வந்திருக்கின்றோம். அதனை நோக்கியாற்றிக் கொள்க.

அரசன்:— மிக்க அன்புடனும், ஏற்ற நிலையிலும் தான் அரசி அருளிச்செய்தனர்.

12. நேரிசை வெண்பா.

ஆனந்தம் தந்திடுமே அம்மையார் ஓர்சொல்லே
ஏனதற்கு ஒப்பில்லை யென்றேனுன்—மானினியே!
நூறுநா ளாளுதலும் நொய்தாமே இம்மொழிக்கு
வேறுநான் காணேன் வினை.

தொடர்ச்சி

அம்மை யாரும் என்மீது
அளவின் மிக்க அன்புடையார்
வெம்மை யான பிழைசெய்தேன்
வேறு யொன்றும் நினைந்திலரே.

பத்மாவதி:— பெருமானே! படத்தில் எழுதியிருக்கும் பெரி யோர்களை நோக்கித் தொழ விழைகின்றேன்.

செவிலித்தாய்:— பாருங்கள், இளவரசி! பாருங்கள்.

(மூடிய ஆடையை மாற்றிப் படம் காட்டுகிறாள்.)

பத்மாவதி:— (நோக்கிவிட்டுத் தனக்குள்) இந்த ஓவியம் பெருமாட்டி ஆவந்திகையின் உருவத்திற்கு நன்கு ஒத்தி ருக்கின்றது. (வெளிப்படையாக) பெருமானே! அக்கா ளின் உருவத்திற்கு இது நன்கு ஒத்திருக்கின்றதா?

*சபலத்தன்மை—இளக்கம்.

அரசன்:— சித்திரம் ஒத்திருக்கின்றதென்பதல்ல. உண்மையான வாசவதத்தைதான் என்று எனக்குத் தோற்றுகின்றது. அந்தோ! கஷ்டம்.

13. நல்லொளி பெற்றதாம் மெய்ந்நிறம்
நாசம டைந்ததும் எங்ஙனே
பல்லொளி வீசுமே நன்முகம்
பற்றியெ ரிந்ததும் எவ்விதம்?

பத்மாவதி:— பெருமானது சித்திரம் பார்க்கட்டும். பார்த்த பின் தீர்மானிக்கலாம். இது அக்காளுக்கு ஒத்ததோ இல்லையோவென்று.

செவிலித்தாய்:— பாருங்கள் இளவரசீ! பாருங்கள்!

பத்மாவதி:— (பார்த்துவிட்டு) பெருமான் உருவம் ஒத்திருப்பதால் மற்றதும் ஒத்ததென்று அறியலாம்.

அரசன்:— இப்படம் பார்த்தது முதல் உவகைமிக்க ஆவல் காணப்படுகின்றது. அஃதென்னை?

பத்மாவதி:— இப்படத்திற்கொத்த ஒருபெண் இங்கு தங்கியிருக்கிறாள்.

அரசன்:— வாசவதத்தையினுடையதோ?

பத்மாவதி:— ஆம்.

அரசன்:— ஆனால் விரைவில் அழைத்துவருக.

பத்மாவதி:— பெருமானே! எனது திருமணத்திற்குமுன் தன் சகோதரி என்று கூறி ஓர் அந்தணன் ஓர் மாதைப் பாதுகாக்க என்னிடம் அளித்தான். கணவன் மறுநாட்டிற்குச் சென்றிருக்கின்றான். அவள் வேற்றுடவரைக் காண்பதில்லை. ஆதலால், என்னோடு வரும்போது நாதன் நோக்கியறிந்துகொள்க.

அரசன்:—

14. அந்தணன் சோதரி யாகிலோ
அரிவை நம்மவ ளல்லவே
இந்த உலகினில் எண்ணிலர்
இன்னுரு ஒத்தவர் தாமரோ.

பணிப்பெண்:— (புகுந்து) மன்னர்பிரானுக்கு வெற்றியுண்டாவதாக. இதோ உச்சைனிக்காரன் ஓர் அந்தணன் இளவரசியினிடம் பாதுகாக்க ஒப்புவித்த சகோதரியை மீட்பதற்கென்றுகூறி வாயிலின் கண் நிற்கின்முன்.

அரசன்:— பத்மாவதி, அந்த மறையவன்தானு?

பத்மாவதி:— இருக்கலாம்.

அரசன்:— ஏற்றவாறு உபசாரங்கள்செய்து மறையவனை விரைவில் அழைத்து வருக.

பணிப்பெண்:— கட்டளைப்படியே.

அரசன்:— பத்மாவதி! அம்மாதையும் அழைத்து வருக.

பத்மாவதி:— பெருமான் கூறுவதுபோல்.

(சென்றனள்.)

(பின்னர் யௌகந்தராயணனும் பணிப்பெண்ணும் வருகின்றனர்.)

யௌகந்தராயணன்:— (தனக்குள்.)

15. ஆசிரிய விருத்தம்.

எந்தன் வேந்தன் நன்மைக்காய்
இந்தத் தேவியை மறைத்தேன்யான்
அந்தம் சேர்ந்த காரியங்கள்
அனந்தம் செய்தேன் அவர்க்காக
புந்தி நினைத்த வாறுசு
பூர்த்தி யான பலன்பெறுமே
சிந்தை நொந்து அஞ்சுகின்றேன்
சிறந்த மன்னன் யாதுரைப்பான்?

பணிப்பெண்:— இதோ! அரசர்; பெரியீர்! அண்மையிற் செல்க.

யௌகந்தராயணன்:— (அண்மையிற் சென்று) வெற்றியுண்டாவதாக. அரசே! வெற்றியுண்டாவதாக.

அரசன்:— (தனக்குள்) இவ்வோசை முன்னர் கேட்டது போல் தோன்றுகின்றது. (வெளிப்படையாக.) மறையவரே! தங்களது உடன்பிறந்தவளையா பத்மாவதியிடம் பாதுகாக்க ஒப்புவித்தீர்கள்?

யௌகந்தராயணன்:— ஆம்.

அரசன்:— ஆனால் விரைவில் இவர்களது சகோதரியை அழைத்து வாருங்கள். விரைவில் அழைத்து வாருங்கள்.

பணிப்பெண்:— கட்டளைப்படியே.

(சென்றனள்.)

(பின்னர் பத்மாவதியும், வாசவதத்தையும் பணிப்பெண்ணும் வருகின்றனர்.)

பத்மாவதி:— வருக, பெருமாட்டி! வருக. ஓர் நற்செய்தி சொல்லவேண்டும்.

வாசவதத்தை:— என்னை, என்னை?

பத்மாவதி:— அம்மணியின் சகோதரன் திரும்ப வந்திருக்கிறார்.

வாசவதத்தை:— இப்போதாவது நினைவுவந்ததே! பாக்கியம் தான்.

பத்மாவதி:— (மன்னன் மருங்கிற்சென்று) பெருமானுக்கு வெற்றியுண்டாவதாக! இதோ பாதுகாக்கத்தந்தபொருள் கொண்டுவந்திருக்கிறேன்.

அரசன்:— பத்மாவதி, ஏற்றதைத் திரும்பக் கொடுப்பாய். அடகுப் பொருளைத் திரும்பக்கொடுக்க சாட்சிவேண்டும். அதற்கு இங்கே பெருமான் இரைப்பியனும், அன்னை வசுந்தரையும் உளர்.

பத்மாவதி:— பெரியீர், பெருமாட்டியை அழைத்துச் செல்லுங்கள்.

செவிலித்தாய்:— (ஆவந்திகையைப் பார்த்துவிட்டு) ஹா! எங்களது இளவரசி வாசவதத்தை!

அரசன்:— ஹா! மகாசேனன் மகளா? தேவி, பத்மாவதியுடன் உள்ளேவருக.

யௌகந்தராயணன்:— கூடாது, கூடாது; இவள் என் சகோதரியன்றோ?

அரசன்:— தாங்கள் என்னசொல்லுகிறீர்கள்? இது மகாசேனன் மகளல்லவா?

யௌகந்தராயணன்:— ஓ அரசே,

16. ஆசிரிய விருத்தம்.

பரத குலத்தின் மணிவிளக்கே!
பாவம் அறவே விடுத்தோனே!
விரதம் குறையா வீறுடையீர்!
வினய மிகுந்த நரேந்திரனே!
நிரத ஞானம் நிறைந்தோனே!
நீதி யரசர் நெறியுரைப்போய்!
சரதம் உரைத்தேன் இது நமக்கு
சற்றும் தகுமோ பலாற்காரம்.

அரசன்:— உருவ ஒற்றுமையை யானே பார்க்கின்றேன். திரை நீக்குக.

யௌகந்தராயணன்:— பெருமானுக்கு வெற்றியுண்டாவதாக.

வாசவதத்தை:— பெருமானுக்கு வெற்றியுண்டாவதாக.

அரசன்:— ஹா! இது யௌகந்தராயணன். இது மகாசேனன் புதல்வி.

---

16. நீதியரசர் நெறியுரைப்போய்—அரசர் தன்மங்களையுரைப்பவன் (ஏனையோர்க்கு முன்மாதிரி காட்டுபவன்) சரதம்—மெய். நிரதம்—தாற்பரியமுள்ள.

17. நிலைமண்டில ஆசிரியப்பா.

கண்டது மெய்யோ கனவு தானோ?
கற்புடை மாது கண்முன் நிற்கிறாள்
பொற்புறு தோற்றம் பூர்த்தியாய்க் கண்டேன்
எனினும் அன்று ஏமாந் தேனே.

யௌகந்தராயணன்:— சுவாமி, தேவியை மறைத்து மாற்றினதில் யான் குற்றவாளி. சுவாமி பொறுத்தருள்க. (அரசன்திருவடிகளில் வீழ்ந்தனன்.)

அரசன்:— (எழுச்செய்து) யௌகந்தராயணனல்லவா தாங்கள்?

18. நிலைமண்டில ஆசிரியப்பா.

பித்தன் வேடம் வைத்துக் கொண்டீர்
யுத்தம் பலவும் சித்தி பெற்றீர்
சத்திய சாத்திரம் ஒத்தநும் மந்திரம்
இத்தகை நுமது மெத்த முயற்சி
கீழே சென்று கேடுறு தென்னை
மேலே உயர்த்தின மேதைத் துணைவரே.

யௌகந்தராயணன்:— சுவாமியவர்களின் பாக்கியத்தின் பின்னாலே செல்கின்றேன்.

பத்மாவதி:— ஆம், அக்காள்தான் இது. சகோதரி! ஒரு தோழியென்றெண்ணி யான் எல்லைவிட்டு நடந்துகொண்டேன். ஆதலால் வணக்கத்துடன் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

18. யூகி பித்தர் வேடம் கொண்டான்.

"கூறை கீறிச் சூழ்வா வுடீஇ
நீறு மெய்பூசி நெடிய மயிர்களை
வேறு வேறும் விரகுளி முடித்து
கண்டோர் வெருவக் கண்மல ரடக்கம்
கொண்டோ னுகிக் குறியறி யாமல்" (பெருங்கதை)

மந்திரம்—ஆலோசனை.

மேதை—பேரறிவு.

பித்தர் வேடம் பிரதிஜ்ஞா யௌகந்தராயணத்தில் கூறப்படும். உதயணனை விடுவிக்கச்செய்த சூழ்ச்சியாகும்.

(காலில் விழுகிருள்.)

வாசவதத்தை:— (எழச்செய்து) எழுக சுமங்கலி! என்னைக் காப்பாற்ற *நுமது உடம்பு இங்கு தந்ததுதான் அபராதம்.

பத்மாவதி:—நான் அனுக்கிரகிக்கப்பட்டேன்.

அரசன்:— நண்பரே! யௌகந்தராயணு, என்ன நோக்கத்துடன் தேவியை மறைத்துவைத்தீர்?

யௌகந்தராயணன்:— கௌசாம்பி மட்டும்தான் நான் காப்பாற்றுகிறேனென்று.

அரசன்:— பத்மாவதியினிடம் ஒப்புவிக்கக் காரணமென்னை?

யௌகந்தராயணன்:— புஷ்பக பத்திராதியர் பத்மாவதி பெருமானது அரசியாவாள் என்று குறிப்புரைத்திருந்தனர்.

அரசன்: — இதுவும் உருமண்ணுவான் அறிந்திருந்தானே?

யௌகந்தராயணன்:— ஆம், எல்லோரும் அறிந்திருந்தனர்.

அரசன்:— அந்தோ! உருமண்ணுவான் தந்திரக்காரன்தான்.

யௌகந்தராயணன்:— சுவாமி, தேவியின் நலச்செய்தி உச்சைனியில் தெரிவிக்க பெருமான் இரைப்பியனும் அன்னை வசுந்தரையும் இன்றைக்கே திரும்பிச் செல்வார்களாக.

அரசன்:— அவ்விதமன்று. நாம் எல்லோரும் பத்மாவதியுடன் அங்கே செல்வோம்.

---

*பணயப்பொருளின் மீதுதான் அபராதம்.

யௌகந்தராயணனை யூகியெனவும் அழைப்பர். எல்லாக்கலைகளையும் உதயணனுடன் கற்றான். பிரச்சோதனன் உதயணனை மறைவாய்ப் பிடித்ததால் அரசன் மகளையும் அவனறியாமல் கொண்டு வந்துவிட்டார்கள்.

பரத வாக்கியம்.

19. நிலைமண்டில ஆசிரியப்பா.

விந்த மலையும் விரிந்த இமையமும்
சந்தமார் தோடாம்; சாகரம் வரைநிலம்
ஒற்றைக் குடைக்கீழ் ஓம்புக பன்னாள்
வாழ்க என்றுமே மன்னர் சிங்கமே.

(எல்லோரும் போயினர்.)

[ஆறும் அங்கம் முற்றிற்று.]

நாடகம் முற்றுப்பெற்றது.

வாழ்க செந்தமிழ்.

---

19. கடல்வரையிலும் உள்ளதும், விந்த இமயமலைகளை காதணிகளாக (எல்லையாக) உடையதும் ஆகிய நாட்டை ஒற்றைக்குடைக் கீழ்ப்பன்னாள் காப்பாராக. அரசசிங்கம் என்றும் வாழ்வாராக.

பரதவாக்கியம்:— எல்லா நாடகங்களிலும் இறுதியிலுள்ள அனுக்கிரகவாக்குகளான செய்யுள். நாடகம் முதலில் கண்டுபிடித்த பரதனது புகழின் பொருட்டு கௌரவத்துடன் இயற்றுவதாம். நடன் நாடகத்திற்கொண்ட நிலையை ஒழித்து இசைப்பாடகனும் தன்மையை மேற்கொண்டு கூறும் மங்கல வாழ்த்தாகும்.

அநுபந்தம்

வாசவதத்தை இந்திரனருளால் பிரச்சோதனனுக்குப் பதுமகாரிகையிடம் பிறந்தவள். அவள் அழகுடையவள்.

"யாற்றல் அன்ன கூந்தல் யாற்றுச்
சுழியெனக் கிடந்த குழிநவில் கொப்பூழ்;
வில்லெனக் கிடந்த புருவம் வில்லின்
அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண்;
பிறையெனச் சுடரும் சிறுநுதல் பிறையின்
நிறையெனத் தோன்றும் கறையில் வாண்முகம்;
கிளியென மிழற்றும் கிளவி கிளியின்
ஒளிபெறு வாயி னன்ன வள்ளுகிர்;
வேயெனத் திரண்ட மென்றோள் வேயின்
விளங்கு முத்தன்ன துளங்கொளி முறுவல்;
காந்தள் முகிழன்ன மெல்விரல் காந்தட்
பூந்துடுப் பன்ன புனைவளை முன்கை;" (பெருங்கதை)

என்றிவ்வாறு ஒவ்வொரு உறுப்பும் ஒவ்வொரு பொருளைப் போல் இலங்குவதாய்ப் பெருங்கதையிற் கூறுவது காண்க.

மகாசேனனுக்கு நளகிரியென்னும் பட்டத்து யானை யுளது.

உதயணனும் வாசவதத்தையும் தம்முள் ஒருவரையொருவர் நோக்குதல். தென் கடலிலுள்ள திருமணி வட கடலில் விட்ட ஓர் நுகத்தின் துளையில் பட்டாற்போல,

"தென்கட லிட்டதோர் திருமணி வான்கழி
வடகட னுகத்துளை வந்துபட் டாங்கு
நனிசே ணிட்ட நாட்டின ராயினும்
பொறைபடு கருமம் பொய்ய யாதலிற்
சிறைபடு விதியிற் சென்றவட் குறுகி
மதியமு ஞாயிறும் கதிதிரிந் தோடி
கடனிற விசும்பி னுடனின் றாங்குப்
பைந்தொடிச் சுற்றமொடு தந்தை தலைத்தாள்

ஆயத் திடையோள் பாசிழைப் பாவை
யானை மிசையோன் மாமுடிக் குரிசில்
இருவரும் அவ்வழி பருவனர் நிகழ
மன்னவன் முகத்தே மாதரு நோக்கி
உள்ளமு நிறையுந் தள்ளிடக் கலங்கி." (பெருங்கதை)

இரு யானைகளைப்போல் இருவரும் இருந்தனர்.

"மதக்களி றிரண்டுடன் மண்டி யாஅங்
கில்வழி வந்ததம் பெருமை பீடுறத்
தொல்வழி வயத்துத் தொடர்வினை தொடர
வழுவில் போகமொடு வரம்பின்று நுகரும்
உழுவ லன்பி னுள்ளந் தாங்கி
குலத்தினும் குணத்தினும் கூடிய அன்பினும்."
(பெருங்கதை)

உதயணன் வாசவதத்தையை எண்ணி வருந்தினன். வாசவதத்தை உதயணனை யெண்ணியும், சிறைப்பட்டிருப்பதையும், தந்தையையும் எண்ணுகின்றாள்.

"பைந்தார்த் தந்தையை நொந்த நோயள்
தெளிதல் செல்லா டிண்ணிறை யழிந்து
காம னென்னும் நாமத்தை மறைத்து
வத்தவ னென்னும் நற்பெயர் கொளீஇப்
பிறைக்கோட் டியானை பிணிப்பது மன்றி
நிறைத்தாழ் பறித்தென் னெஞ்சகம் புகுந்து
கள்வன் கொண்ட வுள்ள மின்னும்." (பெருங்கதை)

உதயணன் நளகிரி யானையை வென்றடக்கியதுமுதல் உச்சைனியில் பிரச்சோதனன் எல்லா வசதிகளையும் செய்தனன்.

பத்மாவதியை உதயணன் பார்த்து,

"வனப்பமை வையந் தனக்குமறை யாகிய
கஞ்சிகை கடிவளி யெடுப்ப மஞ்சிடை
வானர மகளிரிற் றோன்றி சுடர
முகைநலக் காந்தண் முகிழ்விர லேவத்

தகைமலர்ப் பொய்கை தண்செங் கழுநீர்
சில்லெனப் பிடித்து மெல்லென விழிந்து
நண்ண வருவோள் போலு மென்கண்
ஆற்றேன்." (பெருங்கதை)

பத்மாவதியும் அவனையே நினைந்துருகினள்.

"உருகு முள்ளமோ டொருமா னொடுங்கி
நின்றோன் போலவு மென்றோள் பற்றி
ஆசி லணியிழை தீயயல் வைத்த
மெழுகுசெய் பாவையி னுருகு நெஞ்சினள்
பள்ளி கொள்ளா ளுள்ளுபு வதிய." (பெருங்கதை)

உதயணன் கனவு காண்டல்.

"மாசில் கற்பின் வாசவ தத்தாய்
வன்க ணாளனேன் புன்கண் தீர
வந்தனையோ?" (பெருங்கதை)

யாழ் வித்தையில் சிறந்தவன் காமன்; அவனுக்குப் பின் தும்புரு; அவனுக்குப் பின் உதயணன் சிறந்தவன் என்றும் கூறுவர்.

வாசவதத்தையின் மகன் நரவாணதத்தன். வித்தியாதரச் சக்கரவர்த்தியானான்.

உதயணன் இறுதியில் வைராக்கியமுண்டாகித் துறவு பூண்டான்.

உதயணன் வாசவதத்தையை யானையிலேற்றியது.

"திருமா நுதலியை தீதொடு வாரா
துதயண குமர னொருபிடி யேற்றி."

காஞ்சனமாலை வாசவதத்தையின் தோழி.

பாஸன் காளிதாசனுக்கு முந்தியவனென்று படித்தோம். இவன் காலத்தில் வடமொழி பேச்சில் இருந்திருக்கும். இவனது வசனம் மிக விசேடம்.

நாடகம்:— "Drama is the imitation of situation" என்பர். "அவஸ்தானுகிருதி நாட்டியம்" கண்ணுக்கும் காதுக்கும் மனதிற்கும் இன்பத்தை யூட்டும்.

ரூபகம்:— சுவையாதாரமான ரூபகம பதது விதம. இப்பத்திலும் நாடகம் முக்கியமாம் "நாடகாந்தம் கவித்வம்" அன்றோ?

நாடகம் சிறப்புற வேண்டுமானல் அதைச் சரிவர நடிக்க ஏற்ற நடிகர்கள்வேண்டும். தமிழ் மொழியில் வடமொழி நாடகங்களும் ஆங்கில நாடகங்களும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. கதைப் பொருள், தலைவன், மெய்ப்பாடு இவைகளை ஆதாரப்படுத்தி நாடகம் வகுத்திருக்கின்றனர்.

கலையாராய்ச்சியில் வல்ல டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்: "பாரதீய நாடகக் கலைக்கு வேண்டுவது நடிகர்களல்ல, நடனமே." இந்நிலையில் நடனம் தொழிலாகவேண்டும். அதில்லையானல் நாடக மேடையில் கீழ்நாட்டவர்க்கு இடமில்லாமற் போகும்.

"ஒரு நாடகத்தில் சுபாவம் விளங்கவேண்டியது ஒரு போட்டோகிராபரது மருந்துகள் பிலிமில் படிந்திருக்கும் உருவங்களை தெளிவாக்குவது போலிருக்கவேண்டும். சுபாவத்திற்கு வளர்ச்சி வேண்டுமென்று விரிந்த பதங்களை உபயோகித்தல் சரியன்று" என வில்லியம் ஆர்ச்சர் கூறுகின்றார்.

நாடகங்கள் உண்மையில் அவை நிகழ்கின்ற காலத்தையும் பக்கத்திலுள்ள நிலைமைகளையும் விளக்கிக் காட்டும். தத்துவ விளக்கமான நாடகம் எழுதி இம்மைக்கும் மறுமைக்கும் பயனுறச் செய்வனவும் உள. பெர்னட்ஷா, ஒனீயல் முதலியோர், ஆங்கில ஆசிரியர்களில் முதன்மையானவர்கள்.

நாடக இலக்கணம் எழுதிய ஓர் புலவர் இவ்வாறு கூறுகிறார்: தலைவன், திரோதாத்தனாகவும் பிரதாபகுணவானாகவும் பெருங்குடியிற் பிறந்தோனாகவும் உலகாளுபவனாகவும் இருக்கவேண்டும். ஐந்து சந்திகளும் பேர்பெற்ற கதைப்

பொருளும் நாலைந்து நடிகர்களும் ஐந்து முதல் பத்து வரை அங்கங்களும் சிருங்காரம் அல்லது வீரம் முக்கிய மெய்ப்பாடும் முக்கிய அமைப்பில் அற்புதச் சுவையும் ஏற்ற தலைவியும் கொண்டு விளங்குவதாம். ஏனைய மெய்ப்பாடுகள் அங்கமாக வரலாம்.

பிரவேசகம்:— (Introductory Scene.) இரு அங்கங் களின் நடுவில் எஞ்சிய பொருளை விவரிப்பதாய் நீச பாத் திரங்கள், நீச பாஷையில் உரைத்தலாம். (வருகை)

கஞ்சுகி:— (மெய்காப்பாளன்.) எப்போதும் மெய்யு ரைப்போன். சிற்றின்பக் குற்றமற்றவன். திறமையும் செயற்கை யறிவும் இயற்கையறிவும் உடையவன்.

தலைவன்:—(Hero) நான்கு விதம். திரோதாத்தனே மேல். நாயகன் வீரனும், வணக்கமுடையோனும், இன்சொலனும், சுத்தனும், சொல் வன்மையுடையனும், தன்னலமற்றவனும், மேன்மைக் குணவானும் ஆவான்.

நாந்தி, பார்க்கும் நூலின் ஆசீர்வதிக்கும் முறையில் எழுதுவது.

(பாயிரம், நாந்தி, பதிகம் என்பர்.)

விஷ்கம்பம்:— மத்திம பாத்திரம் அல்லது நீச பாத் திரம் வழியாக அதீதமானதும் எதிர் காலம் நிகழக்கூடி யது முரைத்தல். அங்கங்களை ஒன்றோடொன்று சேர்ப்பது.

நாடகத்தின் முடிவு பரதகண்டத்தில் மங்களமாயிருக் கும். (காமடி.)

மேனாட்டில் அமங்களமான முடிவும் உண்டு. (டிராஜடி.)

அரங்கத்தடை நீக்கத்திற்கு அணியறையில் வைத்து நடாத்தும் கிரியைக்குப் பூர்வரங்கமென்பர்.

பரீக்ஷைக்குரிய வினாக்கள்.

1. நாடகம் என்றால் என்னை?
2. சொப்பன வாசவதத்தம் முதனூல் யாது?
3. இதன் ஆசிரியரைப்பற்றி விரித்தெழுதுக.
4. பாஸனது காலத்தை ஆராய்க.
5. ஏனைய நாடகங்களினின்றும் இது எப்பொருளில் மாறுபடுகின்றது?
6. இந்நூலின் பெயரை ஆராய்க.
7. உதயணன் கதைகூறும் நூற்கள் யாவை?
8. இந்நாடகத்தின் விசேடங்களைக் கூறுக.
9. இந்நூலுக்கு வேறு எப்பெயர் இடலாம்? காரணம் காட்டுக.
10. பெருங்கதைக்கும் இதற்கும் உள்ள முக்கிய வேறுபாடுகளை விளக்குக.
11. உலகத்திற்கு ஏற்றவைகளைப் பாஸன் இதில் கூறியிருக்கின்றார். உதாரணம் தருக.
12. யௌகந்தராயணன், வசந்தகன், பத்மாவதி, வாசவதத்தை இவர்களது சுபாவத்தை ஆராய்க.
13. உச்சைனி, கோடபதி, கௌசாம்பி, இலவாணகம் குறிப்பெழுதுக.
14. இந்நூலினின்றும் வெளியாகும் பண்டைக்கால ஒழுக்க வழக்கங்கள் யாவை?
15. விஷ்கம்பம், பாதவாக்கியம், நாந்தி, பிரவேசகம் விவரிக்குக.

16. இந்நாடகத்தின் முக்கிய மெய்ப்பாடுகளை உதாரணத்துடன் காட்டுக.

17. வண்டுகள், வெண்ணுரைப்பறவை, காலகதி உவமானம் வேண்டும்.

18. தமிழ் அகப்பொருள் இலக்கணத்திற்கு ஒத்த காதல் இதில் கூறப்படுகின்றதா? ஆராய்க.

19. பெண்கள் முன்னேற்றத்திற்கு இந்நூலினின்றும் சான்று பகருக.

20. இலவாணத்தில் மனைவி யெரிந்து விட்டாளென்றறிந்து அரசன் வருந்தியதை வருணிக்க.

21. இந்நாடகத்தினின்றும் இயற்கை வருணனைக்குதாரணங் கூறுக.

பிழையும் திருத்தமும்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	2	அவளுக்கு	அவளுக்குப்
5	30	கதை	கனவு
8	16	கதையை	கதையைப்
10	17	வருதிற	வருகிற
11	24	வர்ழ்த்தி	வாழ்த்தி
33	1	பெருள்களும்	பொருள்களும்
34	3	சோபாலிகை	சேபாலிகை
35	19	குலைவ தரு.ம்	குலைவு தரும்
40	5	உறைத்ததால்	உறைத்ததனுல்
40	22	மைளன	மௌன
45	10	தெரிக்க	தெரிவிப்பாய்
48	27	வரவிற்காக	வரவிற்காகச்
49	20	யென்னை	என்னை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
51	29	யாழ்க்கோல்	யாழ்க்கோல்"
52	7	அழைத்ததுக்	அழைத்தது
55	2	வளர்த்தோம	வளர்த்தோம்
55	4	பௌரர்	புரத்தார்
55	34	வெஃதுணையாக	வெஃறுணையாக
58	28	நீதியும்	நீயும்
60	3	உட்காரு	உட்கார்
60	11	உட்காரு	உட்கார்
61	25	கொள்ள	மன்னிட
66	8	பதமாவதி	பத்மாவதி
71	14	அறிந்திருந்தன்ர்	அறிந்திருந்தனர்

பாடபேதம்.

-ம் பக்கம்.

13. கட்டளைக் கலித்துறை.

முடைக் காபில நேர்மைப் பசுக்கள் நிறையவுண்டு
மாய்ப் பயிர்த்தொழில் செய்யும் நிலங்களித் திக்கிலில்லை
வார் தலமுடைத் தூயோர் வனமெனச் சொல்லுதற்கு
றைவது மில்லை குழும் புகையே குலாவுதுமே.

-ம் பக்கம்.

7. கோச்சகக் கலிப்பா.

இளவேனிற் காலத்தில் இயங்குகின்ற சந்திரன்போல்
பளபளக்கும் காயாம்பூப் பராகங்கள் பாங்குடனே
இளகிவரும் காற்றுலே எழும்பிவந்து கண்களிலே
களமொழியே வீழ்ந்ததனுல் கலுழ்ந்தவிழ்ந்த கண்ணீரும்.